Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 17 சனிக்கிழமை (03.09.2011) பக்கங்கள் 16 ஓசை – 339

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT


RAMCO

SLS 107 தரம் கொண்டதும்

100 வீத சாதாரண போட்லான்

சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து

(C/848)



அப்படி சொல்லவே இல்லை

08



எங்கள் பணி தொடரும்

05



இவருடைய கண்ணில 'கமரா'

11



தலைமறைவான கடாபி முழக்கம்

13

## இயக்குனர் மீது தாக்குதல்




"வி" எவ்.எம். வானொலியின் நிர்வாக இயக்குநர் ருவன் சுகததாச இனந்தெரியாத நபர்களினால் தாக்கப்பட்டு காயமடைந்துள்ளார். பொரலஸ்கமுவையிலுள்ள அவரின் வீட்டில் வைத்து இனந தெரியாத நபர்கள் மூவரால் அவர் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில், வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நுகேகொடை பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார். தாக்குதல் நடத்துவதற்காக WP/GA 1893 என்ற இலக்கத்தைக் கொண்ட ஜீப் வண்டியிலேயே வந்துள்ளனர்.

# கைதிகள் விடுதலை அமெரிக்கா அழுத்தம்

(வாசிங்கடன்)

இறுதியுத்தத்தின் நிறைவில் பாதுகாப்புப் படைகளால் கைது செய்யப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களை விரைவில் விடுவிக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமெரிக்க அரசு இலங்கை மீது இராஜதந்திர அழுத்தத்தைப் பிரயோகித்து வருகின்றது.


அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் நடைபெற்ற நாளாந்த செய்தியாளர் மாநாட்டில் மேற்படி தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது. இலங்கை விவகாரம் குறித்து செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் வழங்கிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் பேச்சாளர் மார்ட் டோர்னர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

அவசரகால சட்ட விதிமுறைகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் ஏதாவது குற்றச்செயல்களில் ஈடுபட்டிருந்தால் அவர்களுக்கெதிரான குற்றப்பத்திரிகைகளை இலங்கை அரசாங்கம் தாமதமின்றித் தாக்கல் செய்யவேண்டும் எனவும் அல்லது அவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் எனவும் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. நேற்று அமெரிக்க



இராஜாங்கத் திணைக்களத்தில் நடைபெற்ற நாளாந்த செய்தியாளர் சந்திப்பின்போது அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பதில் (15 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறல்; விசாரணை வேண்டும்




யுத்தத்தின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து உரிய முறையில் விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும் என்ற அமெரிக்க நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது. கடந்த வாரம் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போது இலங்கை வலிகாமம் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது. அப்போது அங்கு கருத்து வெளியிட்ட அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் மேற்படி விவகாரம் தொடர்பாக அமெரிக்க அரசின் நிலைப்பாட்டில் மாறறம் எதுவும் இல்லை என்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் முறையான விசாரணை ஒன்றுக்கு இலங்கை அரசைத் தூண்டும் வகையிலான இராஜதந்திர அழுத்தத்தை அமெரிக்கா தொடர்ந்தும்பிர யோகித்துவரும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பீதியைத் தணிக்க இரவுநேர ரோந்து


மர்ம மனிதனின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த யாழ் பொலிஸார் இரவுநேர விசேட ரோந்து நடவடிக்கைகளை நேற்று இரவு முதல் ஆரம்பித்துள்ளனர். மாலை [illegible]று மணிக்கு ஆரம்பமாகும் இந்த ரோந்து மறுநாள் காலை ஆறுமணி வரை நடைபெறும் என யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிஹேர தெரிவித்தார்.

நேற்று மாலை யாழ். பொலிஸ் நிலையத்தில் மர்ம மனிதன் விவகாரம் தொடர்பாக இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார். மேலும் பொது மக்களுக்குப் பாதுகாப்பு இருக்கும் பொலிஸாரைத் தாக்க முயற்சிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

## பீதி தணியாத யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தின் நேற்றைய இரவுப்பொழுதும் பதற்றத்துடனேயே கழிந்தது. மாலையில் இருள் கவியும் நேரம் முதல் அதிகாலை வரை குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் மர்ம மனிதன் பற்றிய பீதி குடிகொண்டிருந்தது. பீதி காரணமாக குறிப்பிட்ட சில கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறிப் பொது இடங்களில் இரவுப் பொழுதைக் கழித்து வருவது கடந்த சில நாட்களாக வழக்கமாகிவிட்டது. மேலும் சிலர் கூட்டுக் குடும்பமாக தமது உறவினர்களுடன் இணைந்து இரவு நேரத்தைக் கழித்து வருகின்றனர். யாழ். பல்கலைக்கழக பெண்கள் விடுதிக்கு அண்மையில் கிறிஸ் மனிதனின் நடமாட்டம் நள்ளிரவு வேளையில் அவதானிக்கப்பட்டதால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

## இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் சிறிதரன் எம்.பி.க்கு முக்கிய பங்கு



லண்டனில் இடம்பெற்ற இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் முன்னணியில் நிற்று செயற்பட்டிருக்கின்றார்.

லண்டனில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் ஆலயத்திற்கு முன்பாக கடந்த வாரம் இந்த இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. ராஜிவ் கொலை வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டவர்களுக்கு எதிரான தூக்குத்தண்டனையை நிறுத்தக்கோரி மேற்படி எதிர்ப்புப் போராட்டம் நடாத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் பிரதான உரையாற்றியுள்ளார் என, திவியின சிங்களப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்திற்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டமொன்றில் கலந்துகொள்வதற்கு லண்டன் செல்ல வீசா வழங்கப்பட்டமை சந்தேகத்தை ஏற்படுத்துவதாக சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார் என்றும் அப்பத்திரிகை மேலும் தகவல் வெளியிட்டிருக்கின்றது.

## அதிகாரப் பரவலாக்கத்தை இலங்கை அவசரமாகச் செய்யவேண்டியுள்ளது

### ஹிந்து பத்திரிகை தலையங்கம்

(கொழும்பு)

ஒரு கணமேனும் தாமதிக்காமல் இலங்கை அரசியல்வாதிகள் இப்போது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு - ஐக்கியப்பட்ட இலங்கையினுள் பரந்த அளவில் அதிகாரத்தை பரவலாக்கும் ஒரு சாதாரண தீர்வு மூலம் முடிவுகாணும் ஒரு அரசியல் கட்டமைப்பை நோக்கி இப்போது அவசரமாக நகரவேண்டியுள்ளது. இவ்வாறு, இலங்கை அரசு அவசரகாலச் சட்டத்தை நீக்கியதை வரவேற்று எழுதியுள்ள இந்தியாவின் ஹிந்து பத்திரிகை அதனது ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

13 ஆவது திருத்தம் ஒரு கண்ணியமான ஆரம்பத்தை வழங்கினாலும் தமிழர்களின் அபிலாசைகள் அதற்கு அப்பால் உள்ளது என்பதை முழு உலகமும் நன்கறியும். ஒரு இராணுவ அமைப்பான எல்.ரீ.ரீ.ஈ, நிர்மூலமாக்கப்படுவதற்கு முன்பு ஜனாதிபதி ராஜபக்ஷ உறுதி வழங்கிய 13 ஆவது திருததத்திலும் கூடுதல் அதிகாரம் என்பதில் உள்ள "கூடுதலை" உறுதிப்படுவதற்கு இதுவே முக்கிய தருணம் என்று அது மேலும் எழுதியுள்ளது.

ஒரு நீடித்த அரசியல் தீர்வினை வடிவமைப்பதற்கு சமீபத்தைய உள்ளூராட்சித் தேர்தல்களில் தீர்க்கமான வெற்றியினைப் பெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் பங்களிப்பும் இன்றியமையாதது. இதுவரை அரசாங்கம் அரசியல் தீர்வு பற்றிய ஒரு தெளிவான கருத்தை தெரிவிப்பதற்கு தவறியுள்ளது, வருத்தமளிக்கும் வகையில் உள்ளது. முயற்சியை நோக்கி அடியெடுத்து வைப்பதற்கு இதுவே ஏற்ற நேரம். இவ்வாறு ஹிந்து பத்திரிகை தெரிவித்துள்ளது.

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் குற்றச் செயல்கள் குவிகின்றன


## தடுத்து நிறுத்துவது யார்?

(வடமராட்சி)
வடமராட்சிக் கிழக்கில் கொடுக்கிளாய் என்னும் கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு 1.00 மணியளவில் வீட்டில் நித்திரையில் இருந்த கொடுக்கிளாயைச் சேர்ந்த பொன்னையா நாகேஸ்வரன் என்பவரது வீட்டில் புகுந்த இனந்தெரியா நபர்கள் அவரை வெட்டிக் காயப்படுத்திவிட்டுத் ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அயலவர்களின் உதவியுடன் மருதங்கேணி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்த அம்புலன்ஸ் வண்டி மூலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேபோன்று, அன்றைய தினம் மாலை வடமராட்சி கிழக்கு கேவிலிருந்து பஸ்சுக்காக இயக்கச்சிப் பகுதியில் இறக்கிவிட்டு கேவிலுக்குத் திரும்பிய கேவிலைச் சேர்ந்த உதயன் என்பவர் இயக்கச்சிக்கும், உடுத்துறைக்கும் இடைப்பட்ட பகுதியில் இனந்தெரியாத நபர்களால் அடிக்கப்பட்டு காயத்துடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஜூடோ மாணவிக்கு ஜனாதிபதி வாழ்த்து



(கொழும்பு)
இந்தியாவில் லக்னோவில் நடைபெற்ற எக்ஸ்போ ஜூடோ 2010 போட்டியில் வெற்றி பெற்ற மாணவிக்கு ஜனாதிபதி வாழ்த்துத் தெரிவித்துள்ளார். அலரி மாளிகையில் நேற்றுக்காலை இந்த சந்திப்பு இடம்பெற்றது.

கேகாலை ரிவிசந்த மத்திய மகா வித்தியாலய மாணவியான மதுராணி லியனகே 48 கிலோ எடைப்பிரிவு போட்டியில் முதலிடம் பெற்றார். அவருக்கு ஜனாதிபதி வாழ்த்துத் தெரிவித்து பாராட்டினார். இந்தப் பாடசாலையின் ஆசிரியர்களும் மாணவர்களும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# சம்பள முரண்பாட்டை நீக்குங்கள் களத்தில் குதிக்கிறது தொழிற்சங்கம்

(கொழும்பு)
சம்பள முரண்பாடுகளை நீக்குமாறு கோரி வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க நடவடிக்கையொன்றை ஆரம்பித்துள்ளனர்.

இதற்கமைய நேற்று முதல் மேலதிக நேர கடமையில் இருந்து விலகிக் கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை வனஜீவராசிகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் பிரபாஷ் கருணாதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

இந்த தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் எச்.டி.ரத்நாயக்கவிடம் வினவியபோது முகாமைத்துவ உத்தியோகத்தர்களின் பிரச்சினை தொடர்பில் சம்பள ஆணைக்குழுவிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

இன்னும் சில தினங்களில் அந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வொன்று கிடைக்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

# யாழ்.ஊடகவியலாளர்களுக்கு நாளை பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)
வட பகுதி ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை நாளை யாழ்ப்பாணத்தில் உள்ள டில்கோ யாழ்.சிற்றி ஹோட்டலில், மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப்பட்டறை, மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் தலைமையில் காலை 9 மணிக்கு நடைபெறும். இந் நிகழ்வில் ஊடக அமைச்சின் செயலாளர் டபிள்யூ. பீ.கணேகல உள்ளிட்ட ஊடக நிறுவன தலைவர்கள் பலர் கலந்து கொள்வர். பிரபல ஊடகவியலாளர்களான மொஹான் சமரநாயக்க, எம்.எஸ்.எம்.அயூப், கச்சி மொஹம்மது மற்றும் திறந்த பல்கலைக்கழகத்தின் சட்ட பீட தலைவி யசோதரா கதிர்காமத்தம்பி ஆகியோர் விரிவுரைகளை வழங்குவர்.

இதன்போது, பிரபல ஊடகவியலாளர்கள் மற்றும் மக்கள் தொடர்பாடல் தகவல் அமைச்சின் அதிகாரிகள் ஆகியோருடன் கருத்துக்களை பரிமாறிக் கொள்ள வடபகுதி ஊடகவியலாளர்களுக்கு இங்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

# இறுதிப் போட்டி இன்று இல்லை

(யாழ்ப்பாணம்)
ஆனைக்கோட்டை பாரதி விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படவிருந்த கிரிகெட் இறுதிப் போட்டி இன்று மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் நடைபெறமாட்டாது என ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

விளையாட்டு நிகழ்வில் பங்கு பற்றும் அணித்தலைவர் ஒருவரின் தந்தையார் மரணமானதைத் தொடர்ந்து இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும், போட்டி நடைபெறும் தினம் குறித்து பின்னர் அறிவிக்கப்படவுள்ளதாகவும் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (105)

# உரும்பிராயில் கிராமகிருஷ்ண மிஷன்

(யாழ்ப்பாணம்)
உரும்பிராய் மேற்கு மானிப்பாய் கோப்பாய் இணைப்பு வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இராமகிருஷ்ண மிஷனின் யாழ்ப்பாணத்தின் முதலாவது கிளை எதிர்வரும் 07 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது. இந்நிகழ்வில் பூசை, பஜனை, ஹோமம், பேச்சு, மங்களாரத்தி என்பன நிகழவுள்ளதாக சுவாமி சர்வரூபானந்தா அறிவித்துள்ளார்.

# செயற்கை அவயவம் பொருத்தல் சாவகச்சேரியில் பதிவு செய்யலாம்

(யாழ்ப்பாணம்)
கோண்டாவிலில் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் செயற்கைக் கால், கை பொருத்தும் நிகழ்வு அன்றைய தினம் நடைபெறவில்லை என்பதால் அதற்காக பதிவு செய்த சாவகச்சேரி பொதுமக்களை இன்று சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு முன்னதாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஒன்று கூடுமாறும், பதிவினை மேற்கொள்ளாதவர்களும் இதில் கலந்து கொள்ளலாம் எனவும் வைத்திய அதிகாரி பணிமனையினர் அறிவித்துள்ளனர். (11)

# அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு லக்ஸ்மன் யாப்பா தகவல்

(கொழும்பு)
நாட்டின் அபிவிருத்திக்கு வரையறுக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மூலம் 9050 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதாக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாபா அபேவர்தன தெரிவித்தார்.

வரையறுக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மூலம் எதிர்க்கட்சியினருக்கு நிதி ஒதுக்கப்படவில்லை என ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்திருந்தார்.

அதற்குப் பதில் அளிக்கும் வகையில் நேற்றுக் காலை அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஆளும் கட்சி அமைச்சர்கள் உறுப்பினர்களுக்கு மட்டுமன்றி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவருக்கும் வரையறுக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நிதி வழங்கப்பட்டதுடன், அதற்கு மேலதிகமாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தலா 50 இலட்ச ரூபா வழங்கப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)
வீதி அகலிப்பு பணிகளுக்காக உயரழுத்த மின் விநியோக மார்க்கங்களிலுள்ள மின் தூண்களை இடமாற்றவேண்டியிருப்பதால் 05.09.2011 திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன்மணல் பிரதேசம், யாழ்பட்டணப் பகுதி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

06.09.2011ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 வரை உரும்பிராய் பிரதேசம், ஊரெழு பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்படுத்தப்படுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# கடற்பரப்பில் களவு சூடை வலைகள் மாயம்



(வடமராட்சி கிழக்கு)
வடமராட்சி கிழக்கு வேம்படி வத்திராயன் பகுதியில் கடந்த 31ஆம் திகதி இரவு, இராசையா ரவிச்சந்திரன் என்பவருக்குச் சொந்தமான இரண்டு தொகுதி சூடைவலை களவாடப்பட்டுள்ளது.

இதனால், இவருக்கு 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் நட்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, இந்த நபருக்குச் சொந்தமான 10 வலைகள் ஒரு வாரத்திற்கு முன்னர் கடலில் களவாடப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எனவே இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கடற்தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (38)

# வலிகாமம் கல்வி வலயத்தில் ஆசிரிய ஆலோசகர் பதவி

(மருதனார்மடம்)
வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள ஆரம்பக்கல்வி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், முறைசாராக்கல்வி, இரண்டாம் மொழி (சிங்களம்) ஆகிய பாடங்களுக்கான சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளது.

வலிகாமம் வலயத்திற்கு உட்பட்ட ஆசிரியர் சேவை வகுப்பு 1 அல்லது வகுப்பு 2-1ஐச் சேர்ந்த பொருத்தமான தகைமையுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்களை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் கோரியுள்ளார்.

விண்ணப்பிக்க விரும்பும் ஆசிரியர்கள் மருதனார்மடத்தில் உள்ள வலயக் கல்வி அலுவலகத்தில் மாதிரி விண்ணப்பப்படிவங்களைப் பெற்று எதிர்வரும் 15.09.2011ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.


வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பத்தாவது அகவையில்

பெயர்: ஸ்ரீசாயித்யா,
முகவரி: நாவற்காடு,
அச்சுவேலி.



பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

சேவைசெய்யும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. தன் குழந்தைகளில் யாராவது ஒருவருக்கு உதவி செய்யும் வாய்ப்பை கடவுள் அளித்தால் அதன் மூலம் நீங்கள் பாக்கியம் பெற்றவராகிறீர்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள் - விவேகானந்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## உயிர் வளர்ப்போம்!

நம் மரபுரீதியான கீழைத்தேயச் சிந்தனையில் உடம்புக்கு நாம் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. உயிர், ஆன்மா, உள்ளொளி என்று கண்ணுக்குக் காட்டி விளக்கிவிட முடியாத சங்கதிகளுக்குத்தான் நமது சிந்தனை மரபும் தத்துவஞானங்களும் பெரிதும் முக்கியத்துவம் அளித்துப் பேசி வந்திருக்கின்றன. 'காயமே இது பொய்யடா வெறும் காற்றடைத்த பையடா' என்ற அளவில்தான் உடம்பைப் புறக்கணித்து வந்திருக்கிறோம்.

உடம்பை வளர்த்தே உயிர் வளர்க்க முடியும் என்பதெல்லாம் சிலருக்கு மட்டுமே எட்டிய சிந்தனையாகத்தான் தெரியவருகிறது. உடல் ஒரு இயந்திரம் போலத்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த இயந்திரம் பழுதடைந்து நின்றவுடன் உயிர் போய்விட்டது என்று கூறிக் கொள்கிறோம். ஆக, உடல் நன்றாக இருந்தால்தான் உயிர் நன்றாக இருக்கும். சுவரை வைத்துத்தான் சித்திரம் என்று சொல்லப்படுவது, நாம் நன்றாக இருப்பதற்கு நன்கு உடலைக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்பதைத்தான்.

உடம்புக்கு நோய் நொடி வராதிருக்க மருந்தல்ல, உடற்பயிற்சியையே மருத்துவர்கள் வலியுறுத்துகிறார்கள். ஒரு நாளைக்கு பதினைந்து நிமிடம் நடந்தால் போதும், மாரடைப்பு, கான்சர் போன்ற நோய்களின் ஆபத்து நம்மை நெருங்காது என்று புதிய ஆய்வு மூலமும் தெரியவந்துள்ளது. வாரத்துக்கு நூற்று ஐம்பது நிமிடங்களாவது உடற்பயிற்சி செய்வது வாழ்க்கைக்கு அவசியம் என உலக நல நிறுவனம் நிர்ணயித்துள்ளது.

தைவான் ஆராய்ச்சியாளர்கள், அவ்வளவுகூடத் தேவையில்லை அதைவிட மிகக் குறைவான நேரம் சும்மா ஓடியாடினால் போதும் என்ற தகவலைச் சொல்லி சோம்பேறிகள் வயிற்றிலும் பாலை வார்த்திருக்கிறார்கள். தைவான் ஆராய்ச்சியாளர்கள் பன்னிரண்டு ஆண்டுகளில் நான்கு லட்சம் பேரை ஆய்வு செய்து இந்த முடிவை அறிவித்திருக்கிறார்கள்.

இந்த ரீதியில் போனால் உடற்பயிற்சியே அவசியமில்லை என்ற செய்தி வராதா என்றுகூட அதிசோம்பல் திலகங்கள் எதிர்பார்க்கக் கூடும். நடப்பது, ஓடுவது, படி ஏறுவது, சைக்கிள் ஓட்டுவது, நீச்சல் அடிப்பது போன்ற எந்தவிதமான உடற்பயிற்சியும் இல்லாதிருப்பது நோய்களுக்கு விடுக்கும் அழைப்பு என்பதில் மருத்துவர்களிடையே மாறுபட்ட கருத்து இல்லை. ஒவ்வொரு நாளும் அல்லது கிழமைக்கு எத்தனை நிமிடம், என்ன விதமான பயிற்சி அவசியம் என்பதில் தொடர்ந்து மாறுபட்ட கருத்துக்கள் வெளியாகின்றன.

வாரத்தில் ஐந்து நாட்கள் முப்பது நிமிடங்கள் லேசான பயிற்சியும், மூன்று நாட்கள் இருபது நிமிட கடும் பயிற்சியும் தேவை என்பது பெரும்பாலான ஆராய்ச்சிகளின் அடிப்படையில் சிபாரிசு செய்யப்படுகிறது. நடப்பதற்கே தயங்கும் சோம்பேறிகளை ஓடச் சொன்னால் பலிக்குமா? அத்தகையவர்களுக்கு ஆறுதல் தருகிறது தைவான் நாட்டவர்களின் ஆய்வு.

கீழே விழுந்த பென்சிலை குனிந்து எடுப்பது, பற்றரி முடிந்த ரிமோட்டை வீசிவிட்டு எழுந்துபோய் தொலைக்காட்சியில் அலைவரிசைகளை கையால் மாற்றுவது, லிப்ட் இருந்தாலும் இறங்கிவர படிகளை பயன்படுத்துவது, கடைகண்ணிக்கு நடந்தே போய்வருவது இந்த மாதிரியான அலட்டல் இல்லாத அசைவுகளும் ஆரோக்கியத்துக்குப் பெரிதும் உதவுகின்றன என்று கண்டிருக்கிறார்கள். சாராம்சம் என்னவென்றால் உடல் அசைந்துகொண்டே இருக்க வேண்டும் அவ்வளவுதான்..

தொடர்ச்சியாக தொலைக்காட்சி முன்னால் இருப்பதும் கம்ப்யூட்டரில் வேலை செய்வதும் உடல் அசைவுக்கு உதவாது என்பதால் அவை தவிர்க்க வேண்டியவை. எப்போதும் சுறுசுறுப்பாக இயங்குவதுபோல் கைகால்களை ஆட்டி நடிப்பதுகூட நல்லது. நாளடைவில் உண்மையாகவே சுறுசுறுப்பாகி விடுவோம். கொடிய நோய்கள் நம்மை நெருங்காமல் நம்மைவிடவும் மோசமான புதிய சோம்பேறிகளைத் தேடிப் போகும்.

உடலை நல்ல முறையில் பராமரித்து இயலாமைத் துன்பங்கள் நீங்கி நோயற்று நீடு வாழ்வோம்!

- ஆசிரியர்

# பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகும் மாணவர்கள் வேண்டத்தகாத செயல்களில் ஈடுபடக்கூடாது

## - வவுனியா மாவட்ட அரச அதிபர்



(வவுனியா)

இந்த நாட்டில் வருங்கால தலைமைத்துவத்தினை பொறுப்பேற்க வேண்டி நீங்கள் பல்கலைக் கழகக் கல்வியை நல்ல முறையில் பூர்த்தி செய்து வெளியேறுவதன் மூலம் உங்களுடைய எதிர்காலம் சிறப்படையும் அதற்கு மாறாக நீங்கள் பல்கலைக் கழகங்களில் நடைபெறும் வேண்டத்தகாத செயல்களில் ஈடுபடுவீர்களானால் எதிர்காலம் இருளாகிவிடலாம் என வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எம்.எஸ். சாள்ஸ் தெரிவித்தார் .

வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற வன்னிமாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களை வரவேற்கும் வைபவத்திற்கு தலைமை வகித்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார் அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் தற்போது பல்கலைக் கழகங்களில் மாணவர்கள் நடந்துகொள்ளும் விடயங்களைப் பார்க்கும் போது பெரும் கவலையளிக்கிறது.

கடந்த 14 ஆண்டுகாலம் உங்களுடைய கல்விக்காக பெற்றோர் பெரும் தொகைப் பணத்தை செலவு செய்திருப்பார்கள் இப்போது உயர் கல்விக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள் இன்னமும் நான்கு ஆண்டுகள் பெற்றோர் உங்களுடைய கல்விக்கு செலவு செய்யவேண்டியுள்ளது பல்கலைக்கழகத்திற்கு நுழையவுள்ள நீங்கள் கல்வியைச் சிறந்தமுறையில் பூர்த்தி செய்து வெளியேறுவதன் மூலம் உங்களுடைய பெற்றோருக்கும் நாட்டுக்கும் பயனுள்ளவர்களாக இருக்கமுடியும் என அவர் மெலும் தெரிவித்தார்.

## கூட்டம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மாவட்ட குருளைச் சாரணர் மற்றும் சாரணர் தலைவர்களுக்கான கூட்டம் மாவட்ட ஆணையாளர் மு.ரவீந்திரன் தலைமையில் யா/வேலாயுதம் மகாவித்தியாலய மண்டபத்தி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் வடமாகாண மட்ட ஜம்போறி வருடாந்த சேவைப் பாசறை, தேசிய நூற்றாண்டு விழா குருளைச் சாரணர் விழா என்பன பற்றிக் கலந்துரையாடவுள்ளதால் சாரணர் தலைவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (109)

□ □ □

பருத்தித்துறை மாவட்ட சாரணர் சங்க் பொதுக்கூட்டம் நாளை ஞர்யிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வடமராட்சி வடக்கு பிரதேச செயலரும் பருத்தித்துறை மாவட்ட சாரணர் சங்கத் தலைவருமான இரா.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் புதிய நிர்வாகக் குழு தெரிவு இடம்பெறவுள்ளதால் சாரணத் தலைவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

## யாழில் உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்குப் பெரும் கிராக்கியும் தட்டுப்பாடும் நிலவி வருகின்றன. தென்பகுதியிலிருந்து வந்த மக்கள் இப்பொருட்களை அதிகளவில் கொள்வனவு செய்து கொண்டு சென்றதால் அவற்றுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. புழுக்கொடியல், பனாட்டு மற்றும் மோர் மிளகாய், வடகம் போன்ற உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் விலைகள் சடுதியாக அதிகரித்துக் காணப்படுகின்றன. (வி)

## பாடசாலையில் சிரமதானப் பணி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையின் சுற்றுச் சுழலை துப்புரவு செய்யும் முகமாக இப்பகுதி பொதுமக்களால் சிரமதானப் பணி ஒன்று நேற்றையதினம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

2ஆம் தவணை முடிவில் மூடப்பட்டிருந்த பாடசாலைகள் 3ஆம் தவணை கல்விச் செயற்பாடுகளுக்காக அடுத்த வாரம் திறக்கப்படவுள்ள நிலையில் இப்பாடசாலையின் சுற்றுப்புறச் சுழலை துப்புரவு செய்வதற்காக 100 இற்கு மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு இச்சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர். (கே)

## மூன்றாம் தவணை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறுவதன் காரணமாக மூன்றாந் தவணைக்கான கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் என பிரதி அதிபர் எஸ்.கே எழில்வேந்தன் அறிவித்துள்ளார்.

## நடமாடும் சேவை

(கிளிநொச்சி)

இலங்கை பொலிஸ் படையின் 145 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கிளிநொச்சி பொலிஸ் பிரிவின் ஏற்பாட்டில் நடமாடும் சேவை ஒன்று இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

தர்மபுரம் பகுதியில் நடத்தப்படும் இந்நடமாடும் சேவையில் பொதுமக்களுக்கான பிறப்பு, இறப்பு பதிவுகள் முறைப்பாடுகள் தொடர்பான பொலிஸ் சேவைகளும் மேற்கொள்ளப்படவிருப்பதால் இப்பிரதேசப் பொதுமக்கள் இதில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர். (17)

## கோண்டாவில் பகுதியில் மர்மமனிதன் நடமாட்டம்

(வலிகாமம்)

கோண்டாவில் மேற்கு முத்தட்டுமடம் சந்திப் பகுதியில் நேற்று இரவு மர்மமனிதன் நடமாடியதாக அப்பிரதேச மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசத்திலுள்ள ஒரு வீட்டின் கூரையில் ஏறி ஒட்டைப் பிரித்துப் பார்த்ததாகவும் இதனைக் கண்ட வீட்டுக்காரர் கத்தி கூகுரல் இட்டதை அடுத்து அந்த மர்ம மனிதன் தப்பி ஓடியதாகவும், தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக இப்பகுதிகளில் இனந் தெரியாத நபர்கள் பகல் மற்றும் இரவு வேளைகளிலும் நடமாடி வருவதாக வும் இதனால் இப்பகுதி மக்கள் பகலிலும் அச்சத்துடனே வாழ்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (06)

## கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய வருடாந்த கொடியேற்றத் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. இன்று காலை 6.00 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி முற்பகல் 10.45 மணியளவில் கொடியேற்றம் நடைபெறமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (பா)

## மர்ம மனிதனை யன்னலூடாக எட்டிப்பார்த்த குடும்பஸ்தர் மயங்கி வீழ்ந்து காயமடைந்தார்

(அளவெட்டி)

அயல் வீட்டில் மர்மமனிதன் புகுந்துள்ளான் என எழுப்பிய பரபரப்பை அடுத்து தனது வீட்டு யன்னலூடாகப் பார்த்த குடும்பஸ்தர் ஒருவர் மயங்கி வீழ்ந்து தலையில் படுகாயமடைந்த நிலையில் சங்கானை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அளவெட்டி நாக்கணாவத்தையைச் சேர்ந்த குடும்பஸ்தரான மதி (வயது-35) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

நேற்று முன்தினம் நள்ளிரவு நேரம் அயல் வீட்டில் மர்மமனிதன் புகுந்ததாகத் தெரிவித்த நிலையில் அப்பகுதியில் உள்ளவர்கள், பெரும் அச்சமடைந்து கூக்குரல் இட்டவேளை, மேற்படி நபர் தனது வீட்டு யன்னலூடாக, சம்பவத்தை எட்டிப் பார்த்துள்ளார். இதன் போது அவர் திடீரென மயங்கி நிலத்தில் வீழ்ந்து தலையின் பின் பகுதியில் பலத்த காயமடைந்த நிலையில் உறவினர்களால் சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# வீதி அகலிப்புப் பணிகள் நிறைவுற்றும் மின்சார விநியோகம் கிடைக்கவில்லை!

## தொண்டமான்நகர் மக்கள் கவலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் தொண்டமான்நகர் கிராமத்தில் பல பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டபோதிலும் 120 மீற்றர் நீள இடைவெளி கொண்ட வீடுகளுக்கு மட்டும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீதி அகலிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே மின்சார விநியோகம் வழங்கப்படும் என மின்சார சபையினால் அறிவிக்கப்பட்டபோதிலும் வீதி அகலிப்புக்கள் இடம்பெற்று முடிவடைந்துள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதி மக்கள் தாம் மின்சார விநியோகத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஏற்கனவே, விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பித்ததாகவும் பல பிரதேசங்களுக்கு இந்த மின்சார விநியோகம் வழங்கப்பட்டுள்ள நிலையில் தமக்கு இதனை வழங்காது இருப்பது வேதனை அளிப்பதாகத் தெரிவித்தனர்.

இதேவேளை, விவேகானந்தர் நகர் கிராமத்திலுள்ள மக்களும் தமது விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்து ஒரு வருடகாலமாகியும் இதுவரை மின்சார விநியோகம் வழங்கப்படவில்லை எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து குறிப்பிட்ட பகுதி மக்களுக்கு மின்சார விநியோகத்தைப் பெற்றுக் கொடுக்க ஆவண செய்யுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (77)

# துணுக்காய் வலயக் கல்விப் பணிமனை 10 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பிரதேசத்தில் 10 மில்லியன் ரூபா செலவில் துணுக்காய் வலயக் கல்விப் பணிமனை புனரமைக்கப்பட்டு வருவதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் தெரிவித்துள்ளார். பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இப பணிமனைக்கான புனரமைப்பு வேலைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும், வேலைகள் நிறைவடைந்ததும் துணுக்காய் கல்விப் பணிமனை மாங்குளத்தில் இயங்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.(121)

# விவசாயிகள் அதிக இலாபம்

(கோப்பாய்)

கோப்பாய் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பீற்றூட் கிழங்கு விவசாயிகளுக்கு நல்ல விளைச்சலை ஈட்டிக்கொடுத்துள்ளது. கூடுதலாக இராசபாதை வீதியில் உள்ள விவசாய நிலங்களில் இந்த பீற்றூட் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த பீற்றூட் கிழங்கு அறுவடை செய்யப்பட்டு விவசாயிகளால் சந்தைப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, இக்கிழங்கு தென்பகுதிக்கும் அதிகளவில் ஏற்றுமதி செய்யப்பட்டதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (வி)

# கும்பாபிஷேகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பரந்தன் பன்னங்கண்டி பிள்ளையார் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 11ஆம் திகதி காலை 10.40 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் எட்டாம் திகதி வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு கர்மாரம்பமும், 9ஆம் திகதி இரவு 12.15 மணியளவில் விம்பத்தாபனமும் இடம்பெற்று மறுநாள் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை அடியார்கள் எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (கே)

# மகோற்சவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று சனிக்கிழமை காலை 12.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி காலை 9.00 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் பகல் 12.00 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

இவ் ஆலய உற்சவத்தின் போது தினமும் மாலை திருநெறிக்கழக அனுசரணையுடன் விசேட சொற்பொழிவுகளும் நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கே)

# முதலாளித்துவ சிந்தனைகளை முறியடிக்கும் நோக்கைக்கொண்டவர் பேராசிரியர் சிவத்தம்பி

## படைப்பாளி கே.ஆர் டேவிட்

(குருநகர்)

பேராசிரியர் சிவத்தம்பிக்கு புலிகளின் நடவடிக்கைகளில் உடன்பாடு இருக்கவில்லை முதலாளித்துவ சிந்தனைகள் என்ன வடிவில் தலையெடுத்தாலும் அதனை முறியடிக்கவேண்டும் என்பதே அவ்ருடைய அடிப்படைக் கருத்தாக இருந்து வந்தது.

யாழ். ஆரியகுளம் உயர் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற புலமைத்துவ மரபில் காலம் சென்ற பேராசிரியர் சிவத்தம்பியின் பங்கும், பணியும் என்னும் ஒன்றுகூடல் கருத்தரங்கில் ஆரம்ப உரையை நிகழ்த்திய படைப்பாளி கே. ஆர் டேவிட் மேற்கண்டவாறு கூறினர்.

இந்நிகழ்வு யாழ். வலய முறைசாராக் கல்வி உதவிப் பணிப்பாளர் மு. இராசநாயகம் தலைமையில் நடைபெற்றது. தொடர்ந்து அவர் மேலும் உரையாற்றுகையில்

இறுதிக்காலங்களில் அவருக்கு தான் தனித்து விடுவேனோ என்ற எண்ணம் வாட்டியது இலக்கியக் கோட்பாட்டில் பேராசிரியர் சிவத்தம்பி தெளிவாகவே இருந்துள்ளார். மார்க்ஷிட்டுக்களின் முரண்பாட்டு சிந்தனைகளால் இவரது சிந்தனைகளைக் குறைச்சு மதிப்பிட முடியாது மார்க்ஷிய எழுச்சியில் ஏற்பட்ட தொய்வால் அவரது நிலைப்பாடு தடுமாற நேர்வதைக் காண்கிறோம். அதை நிறுவ மார்க்ஷிட்டுக்கள் இனியாவது முயற்சி எடுக்க வேண்டும் என்று கூறினார் உதவிக் கல்விப்பணிப்பாளர் மு. இராசநாயகம் தனது தலைமையுரையில் கூறியதாவது.

“60 களில் தலையெடுத்த இழிசனர்வழங்கெனும் நவீன கலை இலக்கியப்படைப்பாளிகளை மரபுப்பண்டிதர்களிடம் இருந்து பாதுகாத்து வளர்த்தெடுத்தவர்களில் பேராசிரியர் சிவத்தம்பியும் ஒருவர் மற்றவர் பேராசிரியர் கைலாசபதி என்பது அறிந்த விடயம் என்றார்.

வே. சிவராசா, ச. தியாகலிங்கம், நா. விசுவலிங்கம் மற்றும் க. தணிகாசலம் எ.ஜோர்ச் ஆகியோரும் கருத்துரை வழங்கினர். பேராசிரியர் அபிமானிகள் குழுசார்பில் எஸ். சிவபாலன் சிற்பி நன்றி கூறினார். (68)

# எழிலூர் வேளாங்கன்னி மாதா ஆலய திருவிழா திருப்பலி நாளை ஆரம்பம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை எழிலூர் வேளாங்கன்னி மாதா ஆலயத்தின் திருவிழா திருப்பலி பூசைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

கடந்த கால போரினால் முற்றாகச் சேதப்பட்ட இந்த ஆலயம் நலன் விரும்பி ஒருவரின் நிதி உதவியுடன் மீள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

சுமார் 17 வருடங்களின் பின்னர் இந்த ஆலயத்தின் பூசை வழிபாடுகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. நற்கருணை பெருவிழா இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கும், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு திருவிழா திருப்பலியும் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் ஆசியும் இடம்பெறும் (

# எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(குருநகர்)

யாழ். சமாதானத்துக்கும், நல்லிணக்கத்துக்குமான பணியகம், மாவட்ட சர்வமதக் குழுவின் ஏற்பாட்டில் இளைஞர், யுவதிகளுக்கான எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கை நடத்த முன்வந்துள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். இரண்டாம் குறுக்கு வீதியில் அமைந்துள்ள யேசுநாதர் மண்டபத்தில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை மேற்படி கருத்தரங்கு நிகழவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் இளைஞர், யுவதிகளைத் தவறாது கலந்து கொண்டு பயன் பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (68)







வன்னி மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவான 468 மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா நகர சபை காலசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கௌரவம் பெறும் மாணவர்கள் அழைத்து வரப்படுவதையும், மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சரஸ்வதி மோகநாதன் மங்கள விளக்கேற்றுவதையும், நிகழ்வில் இடம்பெற்ற கலை நிகழ்வையும் காணலாம். (39)

# மக்கள் எமக்கு வாக்களிக்காவிட்டாலும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வோம்



(தென்மராட்சி)

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் பிரதேசங்களின் அபிவிருத்திக்கு நல்ல தொரு சந்தர்ப்பம் கிடைத்தது ஆனால தவறான அரசியல் வழிகாட்டல்களால் சில பிரதேச சபைகள் எமக்குக்கிடைக்கவில்லை. நாம் அப்பிரதேச மக்கள் எமக்கு வாக்களிக்கவில்லை என்பதற்காக அந்தப் பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பில் ஒதுங்கவும் இல்லை ஒதுங்கப் போவதும் இல்லை என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்தார்.

மந்துவில் கிழக்குப் பிரதேசத்திற்கான மின்விநியோகத்தை வைபவரீதியாக தென்மராட்சிப் பிரதேச செயலருடன் இணைந்து ஆரம்பித்து வைத்துப்பேசும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

மந்துவில் கிழக்கு பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் நடராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

அண்மையில் நாவாந்துறையில் நடைபெற்ற சம்பவம் ஒரு வேண்டத்தகாத சம்பவம். இது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் நானும் எமது சக நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரும் ஜனாதிபதியிடம் இது தொடர்பில் நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென உறுதிபடத் தெரிவித்திருந்தோம் என்றார்.

இந்நிகழ்வில் சாவகச்சேரி நகரசபை உறுப்பினரும் ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சி அமைப்பாளருமான அலெக்ஸ்சாண்டர் (சார்ள்ஸ்) தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாவகச்சேரி பிரதேச சபை செயலர் செல்வி தர்சினி தென்மராட்சி மின் அத்தியட்சகர் அன்ரன் ஞானப்பிரகாசம் உட்பட பலர் உரையாற்றினார்கள்.


இந் நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் கொடிகாமம் பிரதேச இணைப்பாளர் விஸ்வா கிராம அலுவலர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உட்பட பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# துணுக்காய் கல்வி வலயத்தில் திறந்த பாடசாலை ஒன்று ஆரம்பம்

(கிளிநொச்சி)

துணுக்காய் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் பாடசாலையிலிருந்து இடைவிலகி மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்குடன் திறந்த பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிமனையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பாடசாலையில் இவ்வாறான மாணவர்கள் மட்டுமல்லாது தொழில் புரிந்து கொண்டு இருப்பவர்களும் வறுமை காரணமாக கல்வியைத் தொடர முடியாதவர்களும் இணைந்து கொண்டு அரச பரீட்சைகளுக்கு தோற்றலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இப்பாடசாலையில் முதற்கட்டமாக 15 முன்பள்ளி ஆசிரியர்கள் கற்றலுக்காக இணைந்துள்ளதாக கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (121)



நல்லூர் இரதோற்சவத்தன்று நாவலர் மணிமண்ட பத்தில் நடைபெற்ற சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் எழுதிய சைவ சமய தர்சனம் நூல் அறிமுக விழாவில் நூலின் முதற் பிரதியை தொழிலதிபர் கல்விக் காருண்யன் இ.எஸ். பி. நாகரத் தினத்திற்கு நூலாசிரியர் வழங்குவதை காணலாம்.

# யாழ்.மாவட்டத்தில் 1413 சிறுவர்கள் சிறுவர் இல்லங்களில் வாழ்கின்றனர்

## - யாழ். மாவட்டச் செயலக புள்ளி விபரத்தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இவ் வருடத்தின் தை மாதம் முதல் யூன் மாதம் வரையான அரையாண்டு காலப்பகுதியில் ஆயிரத்து 413 சிறுவர்கள் சிறுவர் இல்லங்களில் வாழ்வதாக யாழ். மாவட்ட செயலக புள்ளி விபரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

இதன்படி 15 பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள சிறுவர் இல்லங்களில் வாழ்கின்ற சிறுவர்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் வருமாறு.

ஊக்காவற்துறை பிரதேச செயலர் பிரிவுகளில் 198 சிறுவர்களும், யாழில் 76 சிறுவர்களும், நல்லூர்ப் பிரிவில் 367 சிறுவர்களும் சண்டிலிப்பாய்ப் பிரிவில் 165 சிறுவர்களும், சங்கானைப் பிரிவில் 85 சிறுவர்களும், உடுவில் பிரிவில் 51 ,சிறுவர்களும், தெல்லிப்பளைப் பிரிவில் 145 சிறுவர்களும், கோப்பாய்ப் பிரிவில்159 சிறுவர்களும், சாவகச்சேரி பிரிவில் 61 சிறுவர்களும், கரவெட்டிப் பிரிவில் 45 சிறுவர்களும் பருத்தித்துறைப் பிரிவில் 61 சிறுவர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதில் நெடுந்தீவு, வேலணை காரைநகர், மருதங்கேணி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் எந்தவொரு சிறுவர்களும் சிறுவர் இல்லங்களில் இல்லை எனவும் செயலக புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ளன.

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(03.09.2011 – சனிக்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
ஆவணி 17 ஆம் நாள்.
இராகுகாலம் 9.05–10.35, சுபநேரம் 3.05 –4.35,
நட்சத்திரம்: விசாகம் பி.இ 4.00 வரை
திதி: ஷஷ்டி மு.இ 7.28 வரை
ஷஷ்டி விரதம்

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:**– பணக்கஷ்டம், தேக சுகக்குறைவு, மருத்துவச் செலவு, நண்பர் வருகை, அதிகாரப் போட்டி

**ரிஷபம:**– நண்பர் தொல்லை, பண வரவு, குடும்பத்தில், மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், வீதி விபத்துவரலாம்.

**மிதுனம் :**– பணக்கஷ்டம், நண்பர் வருகை, அதிகாரப் போட்டி, வீண் அலைச்சல், தெய்வதரிசனம்.

**கடகம்:**– குடும்பத்தில் மகிழ்ச்சி, பண வரவு, தேக ஆரோக்கியம், கடன் வசூல், நண்பர் தொல்லை.

**சிம்மம்:**– பணக்கஷ்டம், தேக நலம் பாதிப்பு, மருத்துச் செலவு, அதிகாரப் போட்டி, விருந்துபசாரம்.

**கனனி :**– குடும்பத்தில், மகிழ்ச்சி, பண வரவு அதிகாரப் போட்டி, மருத்துவச் செலவு, வீதி விபத்து

**துலாம் :**– பணக்கஷ்டம்,தேக சுகம் பாதிப்பு, மருத்துவச் செலவு, விருந்து பசாரம், வீதி விபத்து வரலாம்.

**விருச்சிகம்:**– குடும்பத்தில் மகிழ்ச்சி, பணவரவு, விருந்துபசாரம், தேக ஆரோக்கியம், நண்பர் வருகை.

**தனுசு:**– பணக்கஷ்டம், குடும்பத்தில் சலனம், தேக நலம் பாதிப்பு, அதிகாரப் போட்டி.

**மகரம:**– குடும்பத்தில் மகிழ்ச்சி பணவரவு, நண்பர் வருகை, உறவினர் தொல்லை, தேக ஆரோக்கியம்.

**கும்பம் :**– பணக்கஷ்டம், குடும்பத்தில் குழப்பம், அதிகாரப் போட்டி, நண்பர் தொல்லை, விபத்து வரக்கூடும்.

**மீனம் :**– குடும்பத்தில் சலனம், பண வரவு, தேக நலம் பாதிப்பு, உறவினர் தொல்லை, அதிகாரப் போட்டி.

# வர்த்தக நிலையம் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருட்கள் திருட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கிருஷ்ணபுரத்தில் நேற்று முன்தினம், இரவு வர்த்தக நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளது.

குறித்த தினத்தன்று இரவு மேற்படி பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகள், சிகரெட், சோடா வகைகள் உள்ளிட்ட 90 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாக குறித்த வணிக நிலைய உரிமையாரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.


குறித்த சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (கே)

# வட்டக்கச்சி பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றும் பணிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஒற்றைக்கை பிள்ளையார் ஆலயப் பகுதியில் வெடி பொருள் இருப்பதாக அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இரணைமடுக் குள அணைக்கட்டின் கீழ்ப் பகுதியிலுள்ள இந்தப் பிள்ளையார் ஆலயத்தை அண்மித்த பகுதிகளில் வெடி பொருட்கள் இருப்பதாக முன்னர் அடையாளம் காணப்பட்டிருந்தன. தற்போது இப்பகுதியில் வெடி பொருட்களை அகற்றும் பணிகள் நேற்றையதினம் "ஹலோ ட்ரஸற்" நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (கே)




அண்டைக் கொருநாள் அளவெட்டிக்குப் போட்டு வந்தனான். அருட்கவி விநாசித்தம்பிப் புலவர் கட்டின கோவில் தேரன்று.

கனகாலமாக பஸ் வழிய போறவாறதே குறைவு. சைக்கிள்ல தான் இஞ்சனேக்க திரிவன்.

இப்ப பக்க வாதம் வந்த பின்னால கனதூரம் சைக்கிளோட மாட்டன். அதால உந்த மினிபஸ்சில தான் போய் வந்தனான்.

அண்டைக்கு நான் பட்டபாடு நாய் படாப் பாடுதான். இப்பிடிச் சொல்றவை மற்றும் படி எனக் கந்த நாய்படாப் பாட்டைப் பற்றிக் கண்ணானைப் படைச்சும் தெரியாது.

பஸ்சில் ஏறினோடன அந்த நடத்துனர் பொடியன் இஞ்சின் பெட்டிக்கு மேல ஏறெண்டான். என்னால அப்புடி ஏறி இறங்கேலா தெண்டு நிண்டன். சனம் வரவர ஏத்திக்கொண்டுதான் இருந்தான். அதில நிண்டா நெரியவேணுமெண்டு பின்னால போனன். அங்கையும் நிக்க முடியேல்ல.

ஒருகையும்,ஒருகாலும் ஏலாது தான பெரிய அவலப் பட்டுக் கொண்டு நிண்டன். சுண்ணாகம் வந்துது.

சனம் இறங்கிக் கொண்டிருக்க எனக்கு முன்னால நிண்டவர் என்னை இடறிக் கொண்டு பின் சீற்புடிக்கப் பாஞ்சார்.

அதுக்கிடேல நீயும் போகமாட்டாய் விடு நான் போக எண்டு என்மேல பாய்ந்தார். பின்னுக்கு நிண்டசனம் இன்னமும் இறங்கிக் கொண்டிருந்துது.

அதேவேளை பின்னுக்கு நிண்ட இளைஞன் என்னை பின்னுக்கு வரச் சொல்லிக் கூப்பிட்டான்.

இப்ப என்ன நடந்து கொண்டிருக்கு சனம் இறங்கேக்க வர முடியுமோ எண்டன்.

எனக்காகத் தான் சீற் பிடிச்சுக் கொண்டு கூப்பிட நான் தன்னிலை பாயிறதெண்டு பேசிக்கொண்டு உதுதான் நன்மைக்குக் காலமில்லை எண்டான்.

எனக்குச் சங்கடமாப் போச்சு உன்ர பாட்டில நில் எண்டன். அவன் நடத்தினரைக் கூப்பிட்டு இவர் இப்புடிச் சொல்லுறாரெண்டு சொல்லிக் கொண்டே முன்பக்கம் போய்விட்டான்.

கொஞ்சத்தால் ஒருவர் என்னைத் தேடிவந்து றப்பாக க தைக்கத் தொடங்கினார். பக்கெண்டு சாராய நெடி வீசியது.

என்னை அப்புடி நில்லு. இப்புடி நில்லெண்டு நடத்துனர் வேலையைத் தொடங்கினார். இவரோட மூண்டு நட்தினர் எண்டதையும் எண்ணிக்கொள்ளுங்கோ!

என்னைச் சுதாகரித்துக்கொண்டு நீ வெறிபோட்டிட்டு வந்து என்ன கதைக்கிறாய் எண்டன்.


அத ராத்திரிக் குடிச்சே நாங்கபடுகிறபாடு உனக்கென்ன தெரியும் எண்டார். இத்தனைக்கும் பிறகு நானாரெண்டு சொன்னன் எல்லாம் கப்சிப் பெண்டு அடங்கிப்போச்சு

அந்த வெறிக்குட்டியைப் பிறகு காணேல்ல. இருக்க சீற்றும் இடைச்சுது நாச்சிமார் கோவிலடி அரசடிச் சந்தில இறங்கேக்க வெறிக்குட்டி மினிபஸ் மிதிபலகையில் நிண்டு கைலாகு கொடுக்க முயற்சித்துது.

நான் கை குடுக்கேல்ல சிங்கள மொழியில் ஏதோ சொன்னார். அரக்கங் கால எனச்சொல்லி இறங்கி நடந்தன். உப்புடி ஒரு நாளில எத்தின பேர் உந்த மினிபஸ் பிரயாணத்தில இடிநெரிப்பட்டுச் சண்டையள் பிடிக்குதுகள் அப்பா!

# யாழ். நகர சிறந்த அணித் தேர்வு முன்னிலையில் ஜொலிஸ்ரார் அணி

(யாழ்ப்பாணம்)



யோர்ற் லெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். சென்றல் விளையாட்டுகழகம் 2011ஆம் ஆண்டிற்கான யாழ். நகரில் சிறந்த அணியைத் தெரிவு செய்வதற்கான நிகழ்வில் யாழ். ஜொலிஸ்ரார் அணி முன்னிலையில் உள்ளது.

15 போட்டிகளில் பங்குபற்றிய ஜொலிஸ்ரார் அணி 11 வெற்றிகளைப் பெற்று 38.5 புள்ளிகளைப் பெற்று முதலிடத்திலும், யாழ். பல்கலைக்கழகம் 14 போட்டிகளில் பங்குபற்றி எட்டு வெற்றிகளைப் பெற்று 35 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்திலும், கே.சி.சி.சி. அணி 11 போட்டிகளில் பங்குபற்றி ஏழு வெற்றிகளைப் பெற்று, 24 புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்திலும், பற்றீசியன்ஸ் அணி ஒன்பது போட்டிகளில் பங்குபற்றி ஆறு வெற்றிகளைப் பெற்று நான்காவது இடத்திலும், கிளாஸ்கொப்பர்ஸ் அணி எட்டுப் போட்டிகளில் பங்குபற்றி ஐந்து வெற்றிகளைப் பெற்று 17.5 புள்ளிகளைப் பெற்று ஐந்தாவது இடத்திலும், சென்றலைட்ஸ் அணி நான்கு போட்டிகளில் பங்குபற்றி மூன்று வெற்றிகளைப் பெற்று 15 புள்ளிகளுடன் ஆறாவது இடத்திலும், யாழ். ஜொனியன்ஸ் அணி ஏழு போட்டிகளில் பங்குபற்றி மூன்று வெற்றிகளைப் பெற்று 13 புள்ளிகளைப் பெற்று எட்டாவது இடத்திலும், யூனியன்ஸ் அணி ஏழு போட்டிகளில் பங்குபற்றி மூன்று வெற்றிகளைப் பெற்று 11.5 புள்ளிகளைப் பெற்று ஒன்பதாவது இடத்திலும், திருநெல்வேலி கிறிக்கற் அணி ஐந்து போட்டிகளில் பங்குபற்றி இரண்டு வெற்றிகளைப் பெற்று 10 புள்ளிகளையும், ஸ்கந்தாஸ்ரார் அணி ஐந்து போட்டிகளில் பற்றுபற்றி இரண்டு வெற்றிகளைப் பெற்று 10 புள்ளிகளுடன் பத்தாவது இடத்தையும், யாழ். சென்றல் அணி 11 போட்டிகளில் பங்குபற்றி மூன்று வெற்றிகளைப் பெற்று 8.5 புள்ளிகளுடன் 11ஆவது இடத்திலும், ஈகிள்ஸ் அணி ஆறு போட்டிகளில் பங்குபற்றி இரண்டு வெற்றிகளைப் பெற்று 6.5 புள்ளிகளுடன் 12ஆவது இடத்திலும், அரியாலை சென்றல் அணி ஐந்து போட்டிகளில் பங்குபற்றி மூன்று புள்ளிகளையும், நியூஸ்ரார் அணி ஐந்து போட்டிகளில் பங்குபற்றி ஒரு வெற்றியுடன் மூன்று புள்ளிகளைப் பெற்றுள்ளதோடு, ஸ்ரான்லி அணி நான்கு போட்டிகளில் பங்குபற்றி ஒரு வெற்றியுடன் மூன்று புள்ளிகளைப் பெற்று 13ஆவது இடத்திலும், ஓல்டீ கோவ்ஸ் அணி மூன்று போட்டிகளில் பங்குபற்றி ஒரு வெற்றி பெற்று 1.5 புள்ளிகளுடன் 14ஆவது இடத்திலும் உள்ளன.

31-08-2011 வரை யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் அனுமதியுடன் நடைபெற்ற 71 போட்டிகளின் முடிவு வழங்கப்பட்ட புள்ளிகள் இது என்பது குறிப்பிடத்தக்கது. (07)

# ஒத்திவைப்பு

விளையாட்டுச் செய்திகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் இன்று நடாத்தப்படவிருந்த சிரேஷ்ட லீக் கால்பந்தாட்டப் போட்டி பிற்போடப்பட்டுள்ளதாக பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் டி.எம். வேதாபரணன் தெரிவித்துள்ளார்.

இப்போட்டியில் பருத்தித்துறை லீக் அணியும், மட்டக்களப்பு கால்பந்தாட்ட லீக் அணியும் மோதவிருந்தது.

இப்போட்டி எதிர்வரும் பத்தாம் திகதி நடைபெறும் என்றும் இன்றைய போட்டி ஒத்திவைக்கப்பட்டதையிட்டு மிகுந்த வேதனை அடைவதாகவும், ரசிகர்கள் இதனால் மிகுந்த ஏமாற்றமடைந்திருப்பார்கள் என்பது எமக்குத் தெரியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை கால்பந்து சம்மேளனத்தினால் கால்பந்தாட்ட லீக் அணிகளுக்கிடையில் இப்போட்டித் தொடர் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எஸ்)

# விக்டோரியாவுடனான ஒருநாள் போட்டி இலகுவாக வென்றது சென். ஜோன்ஸ்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி இலகுவான வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் பிரிவு மூன்றின் இரண்டாவது சுற்று ஆட்டத்திலேயே சென் ஜோன்ஸ் கல்லூரி அணி இலகு வெற்றி பெற்றது. இரு கல்லூரி அணிகளின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்ற இப்போட்டி கடந்த 31ஆம் திகதி சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென் ஜோன்ஸ் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய விக்டோரியாக் கல்லூரி அணி 48.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சிவராம் 34, சிவசங்கர் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிலோசன் 32 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மற்றும் லோகதீஸ்வரன், பிரிசங்கர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 26.4 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கபில்ராஜ் 42, அஜித் ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் செந்தூரன இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

# அலெக்சன் ஞாபகார்த்த கரப்பந்து அரையிறுதியில் மின்னொளி, மத்தி

(மட்டுவில்)

அலெக்சன் ஞாபகார்த்த கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிக்கு கைதடி மின்னொளி மற்றும் ஆவரங்கால் மத்தி அணிகள் தகுதிபெற்றுள்ளன.

கைதடி வடக்கு நவ சனசமூக நிலையமும், நவசக்தி விளையாட்டுக் கழகமும் இணைந்து நடாத்தும் பிரதேச மற்றும் மாவட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத் தொடர் நவசக்தி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற தென்மராட்சிப் பிரதேச மட்டத்தின் காலிறுதிப் போட்டியில் கைதடி மின்னொளி அணியை எதிர்த்து கைதடி வளர்மதி அணி மோதியது. இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய மின்னொளி அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற யாழ். மாவட்ட மட்டத்தின் காலிறுதிப் போட்டியில் கோப்பாய் ஐக்கிய 'ஏ' அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்தி அணி மோதியது. இதில் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய ஆவரங்கால் மத்தி அணி, 2-0 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. இப்போட்டியை ஏராளமான கரப்பந்தாட்ட ரசிகர்கள் கண்டு களித்தமை குறிப்பிடத்தக்கது. (118)

# அமரர் பிரபாகரன் மென்பந்து கிரிக்கெட் தொடர் முதல் சுற்றில் திருநாவலூர், ஞானம்ஸ் வெற்றி

(தும்பளை)

அமரர் பிரபாகரன் ஞாபகார்ந்த மென்பந்து கிரிக்கெட் தொடரின் முதல் சுற்று ஆட்டங்களில் திருநாவலூர் மற்றும் கரவெட்டி ஞானம்ஸ் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

தும்பளை விவேகானந்தா விளையாட்டுக்கழகத்தினால் அமரர் பிரபாகரன் ஞாபகார்த்தமாக 15 ஓவர்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி நடாத்தப்பட்டு வருகின்றது.

விவேகாந்தா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரின் கடந்த 30ஆம் திகதி நடைபெற்ற ஆட்டமொன்றில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து பருத்தித்துறை சென் அன்ரனீஸ் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென் அன்ரனீஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய கரவெட்டி ஞானம்ஸ் அணி 15 ஓவர்கள் நிறைவில் 108 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் நிஷாந்தன் 15, துஷ்யந்தன் 31, செந்தூரன் 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தீஸன் மூன்று, காண்டீபன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய சென் அனரனீஸ் அணி 14 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் காந்தராஜ் 25, தீஸன் 14, பாலரூபன் 11 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் சுபாகரன் நான்கு, துஷ்யந்தன் இரண்டு, அனுஷந்தன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இவ் வெற்றியின் மூலம் இரண்டாவது சுற்றுக்கு ஞானம்ஸ் அணி தெரிவானது.

கடந்த 31ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் திருநாவலூர் அணியும், உதயசூரியன் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற உதயசூரியன் அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் ஆடிய உதயசூரியன் அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரசாந் 29, நிதர்சன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தாரகன், ஜெகந்தன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய திருநாவலூர் அணி 13 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் தாரகன் 22, கபிலன் ஆட்டமிழக்காது 37 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் காந்தன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இப்போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் திருநாவலூர் அணி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இப்போட்டித் தொடரை ஏராளமான ரசிகர்கள் கண்டு களித்து வருவதாகவும், போட்டித் தொடரில் சம்பியனாகும் அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் பெறுமதி வாய்ந்த பரிசு வழங்கப்படும் என்றும், தொடர் நாயகன் விரும் வழங்கப்படும் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (62)

# நவோதய பாடசாலைகளுக்கான விளையாட்டு விழா ஒக்ரோபரில்

(நெல்லியடி)

வடமாகாணத்திலுள்ள 23 நவோதயா பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு விழா அடுத்த மாதம் 9,10,11ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. விளையாட்டினூடாக நல்லுறவை வளர்க்கும் நோக்குடன் வடமாகாணக் கல்வித்திணைக்களத்தால் இவ் விளையாட்டு விழா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.


23 நவோதயா பாடசாலையிலுள்ள விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியருடன் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 15ஆம் திகதி வடமாகாணத் திணைக்களம் நடாத்தவுள்ளதென வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன் தெரிவித்துள்ளார். இதில் ஆண், பெண்களுக்கான கரப்பந்தாட்டமும், பெண்களுக்கான வலைப்பந்தாட்டமும், ஆண்களுக்கான துடுப்பாட்டமும் மற்றும் அஞ்சல் ஓட்டங்களும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (12)

# வியூகங்களை வகுத்துள்ளோம்

(லண்டன்)

அனைத்துத் தொடரிலும் இந்திய அணியை வீழ்த்தும் வியூகங்களை நாம் திட்டமிட்டுள்ளோம். அந்த வகையில் ஒரு நாள் தொடரையும் கைப்பற்றிக் கொள்வோம் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது என இங்கிலாந்து ருவென்ரி 20 அணித் தலைவர் புரோட் தெரிவித்தார். விக்கெட்டுகளை வீழ்த்துவது தான் ஓட்ட எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த சரியான வழியாகும். இந்திய அணி துடுப்பாட்டம் செய்த போது முதல் 10 ஓவர்களில் நாங்கள் சிறப்பாக செயற்படவில்லை. ஆனால் அடுத்த 10 ஓவர்களில் எங்களது பந்து வீச்சாளர்கள் அருமையாக பந்து வீசி தங்களின் திறமையை நிரூபித்தனர். இந்திய அணியை 165 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தியதும், வெற்றி இலக்கை அடைய முடியும் என்று நம்பினோம். மோர்கனின் துடுப்பாட்டம் உண்மையிலேயே அபாரமாக இருந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

# நெருக்கடியில் இலங்கை அணி




((காலி)

அவுஸ்ரேலிய அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணிக்கு 379 ஓட்டங்கள் வெற்றியிலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இலங்கை, அவுஸ்ரேலிய அணிகளுக் கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி கடந்த 31ஆம் திகதி காலி மைதானத்தில் ஆரம்பமானது.

ஆறு விக்கெட்டுக்களை இழந்து 115 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தை அவுஸ்ரேலிய அணி தொடர்ந்தது. ரங்கண ஹேரத்தின் பந்து வீச்சு ஈடுகொடுக்க முடியாது தடுமாறிய அவுஸ்ரேலிய அணி அதன் இரண்டாவது இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அணித் தலைவர் கிளார்க் 60, ஜோன்சன், ஹரிஸ் தலா 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரங்கண ஹேரத் 79 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மற்றும் அணித் தலைவர் டில்சான், வெலகெரத தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

379 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு ஆடி வரும் இலங்கை அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் மஹேல ஜெயவர்த்தன 57, மத்தியூஸ் 32 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றிருந்தனர். பந்து வீச்சில் ஹரிஸ் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இன்று போட்டியின் நான்காம் நாளாகும். ஐந்து விக்கெட்டுக்களை கைவசமுள்ள நிலையில் இலங்கை அணி வெற்றி பெற இன்னும் 259 ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

அவுஸ்ரேலியா முதல் இனிங்ஸ் 273. இலங்கை முதல் இனிங்ஸ் 105.

## விலக ஸ்ரீகாந்த் முடிவு

(புதுடில்லி)

இந்திய கிரிக்கெட் அணியின் தேர்வுக் குழுத் தலைவர் பதவியிலிருந்து ஸ்ரீகாந்த் விலக முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இந்திய கிரிக்கெட் அணியின் தேர்வுக்குழுத் தலைவர் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்தின் 3 ஆண்டு பதவிக்காலம் இந்த மாதம் முடிவடைகிறது. இதனால் அவர் தலைவர் பதவியில் இருந்து விலகக்கூடும் என்று கிரிக்கெட் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பதவிக் காலம் முடிவடைந்த பின்னர் தலைவர் பதவியில் இருந்து வெளியேறுவது தனக்கு மகிழ்ச்சியை அளிக்கும் என பி.சி.சி.ஐயிடம் அவர் கூறியுள்ளார்.

எனினும் அவருக்கு பதவிநீடிப்பு கொடுக்கலாமா என்பது தொடர்பாக பி.சி.சி.ஐ. இதுவரை இறுதி முடிவு எதையும் எடுக்கவில்லை.

இதனிடையே ஸ்ரீகாந்த் விலகினால் அவரது இடத்துக்கு இந்தியாவின் முன்னாள் சகலதுறை வீரர் ரோஜர் பின்னி நியமிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

## இந்திய களத்தடுப்பாளர்களில் சிலர் கழுதைகள் என்கிறார் நாசர் ஹுசைன்




(லண்டன்)

இந்திய-இங்கிலாந்து இடையே புதன்கிழமையன்று நடைபெற்ற ருவென்ரி-20 போட்டியின்போது இந்திய களத தடுப்பாளர்கள் சிலரை கழுதைகள் என இங்கிலாந்து முன்னாள் கப்டன் நாசர் ஹுசைன் விமர்சனம் செய்திருப்பது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

முனாப் பட்டேலின் பந்துவீச்சில் கெவின் பீட்டர்சனின் பிடியை பார்த்திவ் பட்டேல் தவறவிட்டதைத் தொடர்ந்து வர்ணனையாளர் இடத்தில் அமர்ந்து ஹுசைன் இவ்வாறு சர்ச்சைக்குரிய வகையில் கருத்து வெளியிட்டார். இரு அணிகளுக்கும் இடையே உள்ள வேறுபாடு களத் தடுப்புத்தான். இங்கிலாந்து சிறந்த களத்தடுப்பு அணியாக உள்ளது. இந்தியாவில் சிலர் மட்டுமே களத் தடுப்பில் சிறப்பாக உள்ளனர். இந்திய அணியில் 3 அல்லது 4 சிறந்த களத்தடுப்பாளர்கள் உள்ளனர். மேலும் ஒன்று அல்லது இரண்டு கழுதைகளும் இன்னும் அங்கு களத்தடுப்பில் உள்ளன என ஹுசைன் கூறினார். ஹுசைனின் இந்த கருத்துக்கு பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்துள் ளனர். ஹுசைனின் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. இதுபோன்ற நிகழ்வுகள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருக்க ஐ.சி.சி.க்கு பி.சி.சி.ஐ. கடுமையாக எச்சரித்து கடிதம் ஒன்றை அனுப்ப வேண்டும் என்று பாகிஸ்தானின் ஜாகீர் அப்பாஸ் தெரிவித்தார்.

## பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் சிம்பாப்வே சிறப்பான தொடக்கம்



(புலவாயோ)

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் சிம்பாப்வே சிறப்பான ஆரம்பத்தை பெற்றுள்ளது.

இவ்விரு அணிகளுக்கு இடையிலான ஒரு டெஸ்ட் போட்டி சிம்பாப்வேயின் புலவாயோ நகரில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா உல்ஹக் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதற்கமைய முதலில் ஆடிய சிம்பாப்வே அணிக்கு மாவோயோ, சிபாண்டா ஜோடி சிறப்பான தொடக்கத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. அந்த அணியின் ஓட்ட எண்ணிக்கை 71 ஓட்டங்களை எட்டியபோது இந்த ஜோடி பிரிந்தது. இறுதியில் முதல் நாள் ஆட்ட நேர முடிவின்போது சிம்பாப்வே அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் மாவோயோ 82, எர்வின் 38 ஓட்டங்களைப் பெற்று களத்தில் இருந்தனர். மற்றும் சிபாண்டா 45, தைபு 44, மஸகட்ஸா 11, டெய்லர் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சயீத் அஜ்மல் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

## விலகினார் வீனஸ்



(நியூயோர்க்)

சுகவீனம் காரணமாக அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டியிலிருந்து முன்னாள் சம்பியன் வீனஸ் வில்லியம்ஸ் விலகிக் கொண்டார்.

நியூயோர்க்கில் நடைபெற்று வரும் இந்த ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாம் போட்டியின் மூன்றாவது நாளன்று தனது இரண்டாவது சுற்றை ஆட விருந்த வீனஸ் வில்லியம்ஸ் சுகவீனம் காரணமாக விலகிக் கொள்வதாக அறிவித்தார். இதன் மூலம் அவருடன் மோதவிருந்த ஜெர்மனியின் சபின் லூசிகி போட்டியின்றியே மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

எனினும் வீனஸ் தனது முதல் சுற்றுப் போட்டியில் வெட்ஸ்னா டொனட்ஸை நேர்செட் கணக்கில் வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. அண்மைக்காலமாக சுகவீனம் காரணமாக வீனஸ் பெரும்பாலான தொடர்களில் பங்கேற்கவில்லை.

வீனஸ் கடந்த 2000, 2001 ஆம் ஆண்டுகளில் அமெரிக்க ஓப்பன் பட்டத்தை வென றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரின் வெளியேற்றம் அமெரிக்க ரென்னிஸ் ரசிகர்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

## அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் 3ஆவது சுற்றில் ஷரபோவா



(நியூயோர்க்)

யு.எஸ். ஓப்பன் ரென்னிஸ் தொடரின் மூன்றாவது சுற்றுக்கு, ரஷ்யாவின் மரியா ஷரபோவா முன்னேறினார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில், இந்த ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாம் தொடரான, யு.எஸ்., ஓப்பன் ரென்னிஸ் போட்டி நடக்கிறது. இதல் பெண்கள் ஒற்றையர் இரண்டாவது சுற்றில், சர்வதேச தரவரிசையில் 3ஆவது இடத்திலுள்ள ரஷ்யாவின் ஷரபோவா, பெலாரசின் அனஸ்டாசியாவை சந்தித்தார். இதில் அசத்தல் ஆட்டத்தை வெளிப்படுத்திய ஷரபோவா 6-1, 6-1 என்ற நேர் செட்கணக்கில் எளிதாக வென்று, மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு இரண்டாவது சுற்றுப் போட்டியில், இரண்டாம் நிலை வீராங்கனை சுவனரேவா (ரஷ்யா), உக்ரைனின் கேட்டர்யனாவை 7-5, 3-6, 6-3 என்ற செட்கணக்கில், போராடி வீழ்த்தினார். முன்னணி வீராங்கனை டொமினிகாவின் சிபுல்கோவா, அமெரிக்காவின் ஜரினாவிடம் 6-2, 3-6, 5-7 என்ற செட்களில் அதிர்ச்சித் தோல்வியடைந்தார். பிற போட்டிகளில் ஸ்டோசுர் (ஆஸி.,), பெத்ரோவா, கிரிலென்கோ (ரஷ்யா), பெனிட்டா (இத்தாலி), ஆகியோர் வெற்றி பெற்று, அடுத்த சுற்றுக்கு முன்னேறினர்.

ஆண்கள் ஒற்றையர் முதல் சுற்று போட்டியில் இந்தியாவின் சோம்தேவ் தேவ்வர்மன், தரவரிசையில் 4வது இடத்திலுள்ள இங்கிலாந்தின் ஆன்டி முர்ரேயிடம் 7-6, 6-2, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வீழ்ந்தார்.

மற்றொரு ஒற்றையர் முதல் சுற்றில் அமெரிக்காவின் ஆன்டி ரோடிக், சகவீரர் மைக்கேல் ரசலை 6-2, 6-4, 4-6, 7-5 என்ற செட்கணக்கில் வீழ்த்தினார்.

பிற போட்டிகளில் ஜாக் சாக் (அமெரிக்கா), ஜைல்ஸ் சைமன் (பிரான்ஸ்), பெலிசியானோ (ஸ்பெயின்), இஸ்டோமின் (உஸ்பெகிஸ்தான்) போன்றவர்கள் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினர்.

பெண்கள் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா, ரஷ்யாவின் வெஸ்னினா ஜோடி, அமெரிக்காவின் சமந்தா, மடிசன் ஜோடியை 6-2, 6-0 என்ற நேர் செட்களில் எளிதாக வென்றது.

கலப்பு இரட்டையர் போட்டியில் இந்தியாவின் பயஸ், ரஷ்யாவின் வெஸ்னினா ஜோடி, பெத்ரோவா (ரஷ்யா), முர்ரே (இங்கிலாந்து) ஜோடியை 6-2, 6-7, 1-0 என்ற செட் கணக்கில் வென்று, இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றது.

மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியமை மிகுந்த மன மகிழ்ச்சியைத் தருவதாகவும், அடுத்தடுத்த சுற்றுக்களில் முதல் இறுதிப் போட்டிக்கு முன்னேறுவதே முதல் இலக்கு எனவும் வெற்றியின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு மரியா ஷரபோவா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




**4X400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் பங்குபற்றி தென்னாபிரிக்கா இறுதிப்போட்டிக்கு தகுதி பெறுவதற்கு ஒஸ்கார் பிஸ்டோரியஸ் பங்காற்றினார். அரையிறுதிப் போட்டியில் தனது சொந்த சாதனையொன்றுடன் இறுதிப்போட்டிக்கு தென்னாபிரிக்கா தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.**

## அமெரிக்கா முன்னிலை

(டெகு)

தென்கொரியாவில் நடைபெற்று வரும் உல தடகளப் போட்டியில் அமெரிக்கா பதக்கப் பட்டியலில் முதலிடத்திலுள்ளது.

நேற்றைய முடிவின் படி அதிக பதக்கங்களைப் பெற்ற நாடாக அமெரிக்க திகழ்கின்றது என்றும் அதற்கு இணையாக வேறு எந்தவொரு நாடும் அடுத்த நிலையில் இல்லை என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# சி.ஐ.ஏ.யின் இரகசிய விமானம் இலங்கையில் தரையிறங்கியதா?

(கொழும்பு)

அமெரிக்காவின் சி.ஐ.ஏ. அமைப்பினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட தனியார் விமானமொன்று இரகசியப் பயணமொன்றின்போது பயங்கரவாதச் சந்தேக நபர்களைக் கொண்டு செல்வதற்காக 2003ஆம் ஆண்டு இலங்கையில் தரையிறங்கியதாக வொஷிங்டனிலிருந்து வெளிவரும் ஏ.எவ்.பி. செய்திததாபனம் தகவல் தெரிவித்துள்ளது.

சி.ஐ.ஏ.யினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட விமான சேவை நிறுவனங்கள் இரண்டிற்கிடையிலான வழக்கொன்றின் போதே செப்ரெம்பர் 11 தாக்குதலைத் தொடர்ந்து, உலகெங்கும் அமெரிக்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட பயங்கரவாத சந்தேக நபர்களைக் கொண்டு செல்வதற்காக வாடகைக்கு அமர்த்தப்பட்ட தனியார் விமானங்களின் விபரங்கள் வெளியாகியுள்ளன.

12.08.2003ஆம் ஆண்டு வொஷிங்டனுக்கு அருகிலுள்ள டல்லாஸ் சர்வதேச விமன நிலையத்தலிருந்து இத்தகைய விமானமொன்று 6 பயணிகளை ஏற்றிக்கொண்டு பாங்கொக் நோக்கிப் புறப்பட்டதாக வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகை தெரிவித்துள்ளதாக ஏ.எவ்.பி. செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்விமானம் நான்கு நாட்களின் பின் அமெரிக்காவுக்குத் திரும்புவதற்கு முன்னர் ஆப்கானிஸ்தான், இலங்கை, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளில் தரையிறங்கியதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தோனேஷியாவின் ரிதுவான் இஸாமுதீனின் கைது இடம்பெற்ற வேளையில் இப்பயணம் மேற்கொள்ளபட்டுள்ளதாக தென்படுவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போர்க்குற்றங்களில் இராணுவத்தினர் ஈடுபட்டதாக ஒருபோதும் கூறவில்லை

(கொழும்பு)

இராணுவத்தினர் போர்க்குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக தாம் குறிப்பிடவில்லை என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான பேராசிரியர் ராஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.



இராணுவத்தின் சிலர் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகவும் அவர்களுக்கு எதிராக விசாரணை நடத்தப்படும் எனவும் தாம் குறிப்பிடவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது பொதுமக்கள் கொல்லப்பட்டதாக தாம் ஒருபோதும் குறிப்பிடவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். படையினர் உண்மையாகவே பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தியிருந்தால் விசாரணைகளின் மூலம் தெரியவரும் என்றே தாம் கருத்து வெளியிட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

சில இராணுவ உத்தியோகத்தர் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகவும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ராஜீவ விஜேசிங்க தமக்குத் தெரிவித்ததாக இந்திய ஊடகமொன்று தகவல் வெளியிட்டிருந்தது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் அறிக்கையில் சில இராணுவ உத்தியோகத்தர்கள் மனித உரிமைகளில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் ஒப்புக் கொண்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் வெள்ளைக் கொடி வழக்குத் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென விரும்புவதாக தாம் குறிப்பிட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு எவரையும் குற்றவாளிகளாக தீர்மானிக்க முடியாது எனவும் அதற்கான சட்ட அங்கீகாரம் அதற்கு கிடையாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்கப்படாத நிலைமை காணப்படுவதாக தாம் குறிப்பிடவில்லை எனவும் கிழக்கில் குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்கப்படாத நிலைமை காணப்படு வதாக பரவலாக பேசப்படுவதாகவே தாம் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தையை முறிக்கவில்லை என்கிறார் அமைச்சர் சுசில்

(கொழும்பு)

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தையை அரசாங்கம் முறித்துக் கொள்ளவில்லை. பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் எந்நேரமும் தயாராகவே உள்ளது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.**

அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையில் தொடர்ந்த அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தையை அரசாங்கம் ஒருபோதும் இடைநிறுத்தியதில்லை எனக் குறிப்பிட்ட அமைச்சர் பிரேமஜயந்த, எவ்வேளையிலும் அப்பேச்சுவார்த்தை மீண்டும் தொடரலாம் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் ஐக்கிய தேசியக் கட்சியானது அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இடையிலான பேச்சுவார்த்தை நிறுத்தப்பட்டதால் ஏற்படும் விளைவுகள் சம்பந்தமாகவும் இந்நிலை நீடித்தால் அரசாங்கத்துக்கு எதிரான சர்வதேச அழுத்தம் அதிகரிப்பதற்கு அது காரணமாகலாம் எனவும் அக்கட்சியின் எம்.பி. ஜயலத் ஜயவர்தன தெரிவித்திருந்தார். இது தொடர்பாகவே அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணும் நோக்கில் அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்குமிடையில் தொடர்ச்சியாகப் பத்துச் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

பத்தாவது சுற்று பேச்சுவார்த்தை முடிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது அரசாங்கத்துக்கு தமது தரப்பில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் அரச தரப்பின் நிலைப்பாட்டைக் கோரியிருந்தது. அரசாங்கம் அது தொடர்பில் தமது நிலைப்பாட்டினை அறிவிக்கும் பட்சத்தில் அடுத்த கட்ட பேச்சுவார்த்தைக்கு தாம் வரமுடியும் என்ற வேண்டுகோளை விடுத்திருந்தது.



இந்த நிலையிலேயே கூட்டமைப்புடன் அரசாங்கம் எந்நேரத்திலும் மீண்டும் பேச்சுவார்த்தையை தொடர தயாராகவுள்ளதாக அமைச்சர் குறிப்பிடடுள்ளார்.

# துப்பாக்கிப் பிரயோகத்தின் மூலமே லசந்த கொலை செய்யப்பட்டார்

## குற்றப் புலனாய்வுத்திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் சமர்ப்பித்த பிரேத பரிசோதனை அறிக்கைக்கு அமைய, சண்டே லீடர் பத்திரிகையின் ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் கொலை, துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக ஏற்பட்டதென உறுதி செய்யப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளது.



குறித்த கொலை தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் 53ஆவது தடவையாக கல்கிஸை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள இரண்டாவது சந்தேகநபரின் முகவரியை மாற்றுவதற்கு அவரது சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்திடம் வேண்டுகோள் விடுத்தார்.

சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த போது அவர் வசித்த நுவரெலியாப் பகுதியில் உள்ள வீட்டை தற்போது அவர் இழந்துள்ளமையினால், அவரது மனைவியின் ஊரில் சென்று வசிப்பதற்கு நீதிமன்றத்தின் அனுமதி அவசியம் என சட்டத்தரணி குறிப்பிட்டார்.


எனினும் மேல் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளமையினால் அந்த பிணை விதிமுறைகளை மாற்றுவதற்கு இந்த நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என நீதிவானும்,மேலதிக மாவட்ட நீதிபதியுமான நிரோஷா பெர்ணான்டோ சந்தேக நபருக்கு அறிவித்தார்.

பிணை விதிமுறைகளுக்கு அமைய வசிப்பிடத்தின் முகவரியை மாற்ற வேண்டுமாயின் மேல் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என நீதிவான் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கு விசாரணை எதிர்வரும 15ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# அவசரகாலச் சட்டத்தை நீக்கியது பொருத்தமான நடவடிக்கை அல்ல

## தேசிய அமைப்புகளின் ஒன்றியம் கூறுகிறது



(கொழும்பு)

மேற்குலக சக்திகள் இலங்கைக்கு எதிராக மேற்கொண்டு வரும் வேலைத் திட்டங்கள் மத்தியில் அவசரகாலச் சட்டத்தை நீக்கியது பொருத்தமான நடவடிக்கை அல்ல என தேசிய அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது. எல்லே குணவங்ச தேரர், கலாநிதி குணதாச அமரசேகர ஆகியோர் கையெழுத்திட்டு வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குலக சக்திகள் இலங்கைக்கு எதிராக லிபியாவில் மேற்கொண்ட நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்பட முயற்சித்து வருவதாக இவர்கள் எச்சரித்துள்ளனர். அதற்கு முன்னர் சூடானில் மேற்கொண்டதைப் போன்று இலங்கையில் செய்ய மேற்குலக சக்திகள் முயற்சித்தன.

அதிகார பரவலாக்கல் யோசனை ஊடாக நாட்டை மீண்டும் ஸ்திரமற்ற நிலைமைக்கு கொண்டு சென்று, அதன் பின்னர், ஏற்படும் நிலைமையை கட்டுப்படுத்த இராணுவ ரீதியிலான தலையீடுகளை மேற்கொள்ள மேற்குலக நாடுகள முயற்சித்து வருகின்றன. அவசரகாலச் சட்டத்தை நீக்கிய பின்னர், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு சில சக்திகள் கோரிக்கை விடுத்து வருவதாகவும் தேசிய அமைப்புகளின் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

# சந்தேகத்திற்கிடமான பொருட்கள் சீனக் கப்பல்களில் இருக்கவில்லை

## கடற்படை தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு வந்துசெல்கின்ற சீனக் கப்பல்களில் ஆய்வுகூடங்களோ உளவு பார்க்கும் கருவிகளோ இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என கடற்படை அறிவித்துள்ளது.

சீனக்கப்பலொன்று அந்தமான் தீவருகில் இந்திய கடற்படையின் நடவடிக்கைகளை வேவு பார்த்ததாகவும் வேவு பார்த்த கப்பலை இந்தியக் கடற்படை அவதானிக்கத் தொடங்கியதும் அக்கப்பல் இலங்கைக் கடற்பரப்பிற்குள் பிரவேசித்ததாகவும் இந்திய இணையத்தளமொன்று சுட்டிக்காட்டியிருந்தது. இச்செய்தி தொடர்பாகவே கடற்படைமேற்கண்டவாறு தெரிவித்தது.

மீண்பிடிக் கப்பல் போல் அந்தமான் தீவுக் கருகில் குறித்த சீனக் கப்பல் உலவியதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. இக்கப்பலில் பல ஆய்வு கூடங்களும் அதிநவீன வேவு பார்க்கும் கருவிகளும் இருந்ததாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன. குறித்த வேவு பார்க்கும் சீனக் கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்குள் ஊடுருவியதாக வெளிவந்த செய்தியினையும் இலங்கைக் கடற்படையும் துறைமுக அதிகாரிகளும் மறுத்துள்ளனர்.

# மாணவர்களுக்கு மொழிகளைக் கற்பித்து சுற்றுலாத்துறையை வளர்க்க வேண்டும்

## ஜனாதிபதி அறிவுறுத்து

(கொழும்பு)



சுற்றுலாத் துறையின் எதிரகால வளர்ச்சிக்காகப் பாடசாலை மாணவர்களுக்குப் பல்வேறு மொழிகளைக் கற்பிக்க வேண்டியது மிகவும் அவசியம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சுற்றுலாக் ஹோட்டல்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் அதேவேளை, அதன் தரம் தொடர்பாகவும் கவனம் செலுத்த வேணடும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

அடுத்த வருடத்திற்கான வரவு, செலவுத்திட்டத்தைத் தயாரிப்பது தொடர்பாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகளுடன் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போது ஜனாதிபதி இதனைக் கூறியதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

# பாடசாலைகளின் தரத்தை உயர்த்த 2.5 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

நாட்டிலுள்ள கிராமப்புற பாடசாலைகளின் தரத்தை உயர்வடையச் செய்யும் நோக்குடன், 2.5 பில்லியன் ரூபாவை செலவிடப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தில் முதற்கட்டமாக 55 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அதற்கான வேலைகள் இடம்பெற்று வருகின்றன. இந்த வேலைகளில் அரைவாசிப் பகுதி ஏற்கனவே நிறைவு பெற்றுள்ள நிலையில், முழுமையான வேலைகள் இந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் முழுமையா நிறைவடையுமெனவும் அமைச்சர் தெரிவித்தார். அத்துடன் மேற்படி நிதியின் மூலம் மேலும் பல பாடசாலைகளுக்கு ஆய்வுகூடம், நூலகம் மற்றும் நீர் உட்பட அத்தியாவசிய சேவைகள் செய்து கொடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## முல்லைத்தீவில் உப அலுவலகம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கணக்காய்வாளர் நாயகத்திற்குரிய உபஅலுவலர் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை நடைபெற்றது.

கணக்காய்வாளர் நாயகம் எச்.ஏ.எஸ். சமவீர இக்கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார். இக்கட்டட நிர்மாணத்திற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 5.5 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் ஏ.பத்திநாதன் தெரிவித்தார். இந்த நிகழ்வில் பிரதிக் கணக்காய்வாளர் நாயகம், முல்லைத்தீவு அரசாங்க அதிபர் ஏ.பத்திநாதன், 591ஆவது பிரிகேட் தளபதி பிரிகேடியர் எசல மல்பே, பொலிஸ் அத்தியட்சகர் ஜனக குணதிலக, திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மீளாய்வு செய்ய புதிய நடைமுறை

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்கள் தோற்றும் பரீட்சைகளின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் தொடர்பில் சந்தேகம் எழும்போது அவற்றை மீளாய்வு செய்து கொள்வதற்கான புதிய நடைமுறையொன்றை அறிமுகப்படுத்த உயர்கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது

மாணவர்கள் தமது பிரச்சினை தொடர்பில் பல்கலைக்கழக பீடாதிபதிக்கு அறிவிக்கும் வகையிலான புதிய நடைமுறையொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பில் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க பல்கலைக்கழக உபவேந்தர்களுக்களுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் நீக்கி ஜனநாயகச் சூழலை விரிவடையச் செய்யவும்

## ஜனாதிபதியைக் கோருகிறது ஈ.பி.ஆர்.எல்.எவ் (பத்மநாபா அணி)

(யாழ்ப்பாணம்)

அழுத்தங்களுக்கு மத்தியிலும் அவசரகாலச் சட்டத்தை நீக்குவதாக துணிச்சலாகத் தீர்மானம் எடுத்த ஜனாதிபதி, பயங்கரவாதச் சட்டத்தையும் நீக்கி நாட்டில் ஜனநாயக் சூழல் மேலும் விரிவடையவும், சாதாரண சட்டங்கள் மூலம் நீதியான சூழல் மேம்படுவதற்கும் வழிவகை செய்ய வேண்டுமென ஈ.பி.ஆர்.எல்.எவ் (பத்மநாபா அணி) விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக யுத்தத்தின் கோரப்பிடியிலும், பல்வேறு அடங்குமுறைச் சட்டங்களின் பிடியிலும் சிக்கி பல ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் இன்னல்களுக்கும், துயரத்திற்கும் உள்ளாகியது வரலாறாகும்.

மிக நீண்ட காலம் இவ்வாறு உடல், உள ரீதியான பாதிப்புகளுக்கு உள்ளாகியிருந்த தமிழ் மக்களின் இயல்பு வாழ்விற்கு வழி ஏற்படுத்திக் கொடுப்பதும், யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்துள்ள அரசாங்கத்தின் கடமையாகும்.

அவசரகாலச் சட்டத்தை நீக்குவதாக ஜனாதிபதி விடுத்திருந்த அறிவிப்பு தமிழ, முஸ்லிம், மலையக மக்களை மகிழப்படுத்தும் செய்தியாக அமைந்தது. பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் இதனை வரவேற்றிருந்தனர். இதேபோன்று பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் நீக்குவதற்கு ஜனாதிபதி ஆவன செய்ய வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். அதுவே அனைத்து இலங்கை மக்களினதும் எதிர்பார்ப்பாகும்.

கடுமையான சட்டங்கள் மூலம் மக்களின் நியாயமான உணர்வுகளை, ஜனநாயக ரீதியான் எழுச்சியை அடக்கிவிட முடியாது என்பது எமது நம்பிக்கை, இதுவே நம் எல்லோரதும் அனுபவமாகும்.

அத்துடன் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய அரசியற் தீர்வினை விரைவில் அடைவதற்கு உரிய உருப்படியான நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுமாயின் புதிய முறையிலோ, புதிய வடிவத்திலோ மீண்டும், மீண்டும் அடக்குமுறைச் சட்டங்களை உருவாக்கி அமுல்படுத்த வேண்டிய தேவை எதிர்காலத்தில் அரசுக்கு ஏற்படமாட்டாது என்பதையும் இத்தருணத்தில் கூறிவைக்க விரும்புகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# துணுக்காய் கல்வி வலயத்தின் கணித செய்கை போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

துணுக்காய் கல்வி வலயத்தினால் தரம் 2,3,4,5 மாணவர்களுக்கான துரித கணித செய்கைப் போட்டி கடந்த வாரம் நடைபெற்றது. இதில் முதல் 3 இடங்களைப் பெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு,

**தரம் - 02 :-** முதலாமிடம் - ப.அபிஷா (தண்டுவான் அ.த.க.பாடசாலை), 2ஆம் இடம் - வி.தனுசியா (முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை), மூன்றாமிடம் - த.நிஷாந் (யோகபுரம் மகா வித்தியாலயம்).

**தரம் - 03 :-** முதலாமிடம் நி.தனுசன் (வவுனிக்குளம் படிவம் 4), 2ஆம் இடம் - த.தனராஜ் (ஆறுமுகம் வித்தியாலயம்), 3ஆம் இடம் த.அனோஜன் (அனிச்சங்குளம் தமிழ் வித்தியாலயம்).

**தரம் - 04 :-** முதலாமிடம் - ஆர்.பிறைநிலா (அனிச்சங்குளம் தமிழ் வித்தியாலயம்), 2ஆம் இடம் - கு.தனுசன் (பனிக்கங்குளம் அ.த.க.பாடசாலை), 3ஆம் இடம் - வி.சதானுகா (மயில்வாகனம் வித்தியாலயம்).

**தரம் - 05 :-** முதலாமிடம் இ.லக்ஷிகன் - (ஆறுமுகம் வித்தியாலயம்), 2ஆம் இடம் - சி.சஜீபன் (பனிக்கங்குளம் அ.த.க.பாடசாலை), 3ஆம் இடம் :- சி.மதுஷாந்தி (ஒட்டுசுட்டான் இ.த.க.பார்டசாலை) ஆகியோர் பெற்றுள்ளனர் என துணுக்காய் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.விஜயபாலா தெரிவித்துள்ளார். (12)

## நடைபாதைகளில் இந்திய வியாபாரிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரின் பெண்கள் அணியும் மாலைகளை விற்பனை செய்யும் இந்திய வியாபாரிகளின் பிரசன்னம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் தேர்த் திருவிழாவிற்கு இந்தியாவில் இருந்து வருகை தந்த இந்த வியாபாரிகள் ஆலயச் சுற்றாடலில் தாம் எடுத்துவந்த பலவிதமான மாலைகளை வியாபாரம் செய்தனர்.

திருவிழா நிறைவுற்றதும் இவ்வியாபாரிகள் நகரின் நடைபாதை இடங்களில் வைத்து இந்த மாலைகளை வியாபாரம் செய்துவருவதைக் காண முடிந்தது. (வி)

# சிறைகளிலுள்ள ஆயுள் கைதிகளுக்கு அறிமுகமாகின்றது காப்புறுதித் திட்டம்

(கொழும்பு)

ஆயுள் கைதிகளுக்கு புதியதோர் காப்புறுதித் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இக் காப்புறுதித் திட்டம் செப்ரெம்பர் 12 ஆம் திகதி சர்வதேச கைதிகள் தினத்தில் செயற்படுத்தப்படவுள்ளது.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு மற்றும் தேசிய காப்புறுதி நிதியமும் இணைந்து ஆயுள் கைதிகளுக்கான இந்தக் காப்புறுதித் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளன.

ஆயுள் சிறைத்தண்டனை பெற்றுள்ள கைதிகளின் குற்றத்திற்கிணங்கவும் அவர்கள் சிறைச்சாலையில் வாழ்ந்த காலங்களில் செயற்பட்டமைக்கு ஏற்பவும் இந்தக் காப்புறுதித் திட்டத்தில் இணைய அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

கைதிகள் சிறைச்சாலையினுள் சில விபத்துக்கள் மற்றும் வைத்திய சிகிச்சைகள் போன்ற இடர்களைச் சந்திக்கின்றனர்.

அத்தகைய இடரின் போது அவர்களுக்குப் பாதுகாப்பளிக்கும் பொருட்டு இக் காப்புறுதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் சிறைச்சாலையிலே சில தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் பெறும் பணத்தினைக் கொண்டு இவர்கள் இக் காப்புறுதித் திட்டத்திற்கு தேவையான பணத்தை செலுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டு வெடிகுண்டு வெடித்து தகப்பனும் மகளும் காயம்

(வவுனியா)

செட்டிக்குளம் பிரிவில் பெரியதம்பனை கிராமத்தில் காட்டு மிருகங்களைப் பிடிப்பதற்கு கிராமவாசி ஒருவரினால் தயாரிக்கப்பட்ட நாட்டு வெடிகுண்டு வெடித்ததில் தகப்பனும் மகளும் காயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றதுள்ளது. தகப்பன் தயாரித்து வீட்டில் வைத்திருந்த நாட்டுக் குண்டை மகள் எடுத்து சுவரின் மீது வீசியபோது அது வெடித்ததில் தகப்பனான சுப்பிரமணியம் சிவசங்கர் (வயது -36), மகள் அனுசியா (வயது -9) ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

செட்டிக்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சையின் பொருட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (39)

# சுங்கப் பரிசோதனைகளின் பின்னரே சிமெந்து விற்பனை செய்ய அனுமதி

(கொழும்பு)

சுங்கப் பரிசோதனைகளின் பின்னரே தேசியக் கூட்டுறவுச் சபை பொதுமக்களுக்கு சிமெந்தை விற்பனை செய்வதாக இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கை தேசியக் கூட்டுறவுச் சபை 14 ஆயிரம் சிமெந்து மூடைகளை இறக்குமதி செய்துள்ளதாக திணைக்களத்தின் பொருட்கள் கண்காணிப்புப் பிரிவின் சுங்கப் பணிப்பாளர் எஸ்.டீ.எஸ்.குணதுங்க தெரிவித்தார்.

அவற்றில் ஆயிரத்து 680 சிமெந்து மூடைகளைக் கொண்ட மூன்று கொள்கலன்கள் மாத்திரமே துறைமுகத்தில் தற்போது எஞ்சியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கூட்டுறவுச் சபையின் கோரிக்கைக்கு அமைய சுங்கக் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டதன் பின்னர் தரச் சான்றிதழ் வழங்கப்படுவதற்காக 22 கொள்கலன்கள் கூட்டுறவுச் சபையின் களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை லக்கி வகை சிமெந்து நிறுவனத்திற்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த தற்காலிகத் தடை நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்

## ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்



(கொழும்பு)

கைது செய்யப்பட்டுள்ள சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலித் தலைவர்கள் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு நகைப்புக்குரியது.

விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களுக்கு சொகுசு வாழ்க்கை அமைத்துக் கொடுத்துள்ள அரசாங்கம் சாதாரண சந்தேக நபர்களைத் தொடர்ந்தும் தடுத்து வைக்க சட்டங்களை இயற்றி வருகின்றது.

அரசாங்கத்திற்கு எதிராக குரல் கொடுப்போரை ஒடுக்கும் நோக்கிலேயே பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசாங்கம் வலுப்படுத்த உத்தேசித்துள்ளது.

அவசரகாலச் சட்டத்தில் காணப்பட்ட கடுமையான சட்டங்கள் தொடர்ந்தும் வேறு வழிகளில் அமுல்படுத்தப்படுகின்றது.

எனவே,வடக்கில் தொடர்ந்தும் அரை இராணுவ ஆட்சி நிலவும்.

குமரன் பத்மநாதன், கருணா, பிள்ளையான், ஜோர்ஜ் மாஸ்டர் போன்றவர்களுக்கு சொகுசு வாழ்க்கை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

எனினும், அவர்களினால் பயங்கரவாதிகளாக உருவாக்கப்பட்ட சாதாரண மக்கள் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் பாதுகாப்பு செலவினம் அடுத்த ஆண்டு 1300 கோடி ரூபா அதிகரிக்கும்

## நிதியமைச்சு மதிப்பீடு

(கொழும்பு)

இலங்கையின் பாதுகாப்புச் செலவினம் அடுத்த ஆண்டு 1300 கோடி ரூபாவினால் அதிகரிக்கும் என்று நிதிஅமைச்சு மதீப்பிடு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த ஆண்டு பாதுகாப்புச் செலவினத்துக்காக 21,000 கோடி ரூபாவை அரசாங்கம் வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்திருந்தது.

ஆனால் 2012ம் ஆண்டு இந்தத் தொகை 22,300 கோடி ரூபாவாக அதிகரிக்கும் என்று இலங்கையின் நிதியமைச்சு மதிப்பிட்டுள்ளது.

அடுத்த ஆண்டில் பாதுகாப்பு அமைச்சுக்கு 21,700 கோடி ரூபா மீண்டெழும் செலவினங்கள் ஏற்படும் என்றும், முதலீட்டுச் செலவினங்களுக்கு 600 கோடி ரூபா தேவைப்படும் என்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டில் இலங்கையின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக புதிய தொழில்நுட்பக் கருவிகளைக் கொள்வனவு செய்வதற்கும், முப்படைகளினதும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும்,வடக்குக் கிழக்கில் புதிய காவல்நிலையங்களை அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு 600கோடி ரூபா மூலதனச் செலவின ஒதுக்கீடு பயன்படுத்தப்படும் என்றும் நிதி அமைச்சு வட்டாரங்கள் கூறியுள்ளன.

# அனைத்து மாகாண வீதிகளுக்கும் அடுத்த வருட இறுதிக்குள் காபற்

## அமைச்சர் பசில் ராஜபக்ஷ



(கொழும்பு)

இலங்கையில் அனைத்து மாகாண வீதிகளும் 2012ஆம் ஆண்டு முடிவடைவதற்குள் முற்றாக காப்பர்ட் இடப்பட்டு செப்பனிடப்படும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்டத்தின் தெவிநுவர தேர்தல் தொகுதிக்குட்பட்ட வீதியொன்றினை காப்பர்ட் இடும் வைபவத்தினை தொடக்கிவைத்து உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்.

மக்களின் போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கின்ற அனைத்து வீதிகளும் புனரமைக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இவ்வாண்டுக்குள் மூன்றில் இரண்டு பகுதி வீதிகள் காப்பர்ட் இடப்பட்டு முடிந்துவிடும். எஞ்சிய வீதிகள் அனைத்தும் அடுத்தவருட இறுதிக்குள் காப்பர்ட் இடப்படும். இதற்கான நிதியினை அரசாங்கம் ஏற்கனவே ஒதுக்கியிருக்கிறது என்று குறிப்பிட்டார்.

# அமெரிக்க விமானங்களின் ஊடுருவல் செய்திகளை வெளியிடுவதற்குத் தடை

## என்கிறது ஆங்கில ஊடகம்

(கொழும்பு)

அமெரிக்கப் போர் விமானங்கள் இலங்கை வான்பரப்பில் ஊடுருவியது பற்றிய செய்திகளை வெளியிட விமானப் படைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்து ஊடகங்களுக்கோ அல்லது பொதுமக்களுக்கோ எந்தக் கருத்தையும் வெளியிடக் கூடாது என பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ இலங்கை விமானப்படை அதிகாரிகளுக்கு கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கை வான்பரப்பில் பத்து அமெரிக்கப் போர் விமானங்கள் கடந்தமாதம் 2ஆம் திகதி ஊடுருவிய செய்தியை இலங்கை விமானப்படைப் பேச்சாளர் விங்கொமாண்டர் அன்று விஜேசூரிய உறுதி செய்திருந்தார்.

ஆனால் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகமும், இலங்கையின் குடியியல் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிரியங்கார ஜெயரட்ணவும் அத்தகைய ஊடுருவல் ஏதும் நிகழவில்லை என்று கூறியிருந்தனர்.

இந்த நிலையிலேயே, இந்த ஊடுருவல் பற்றி எந்தக் கருத்தையும் வெளிடக் கூடாது என்று கோத்தாபய ராஜபக்ஷ பணித்துள்ளார்.

இதற்கிடையே விமானப் படைக்கு கொள்வனவு செய்யப்படும் புதிய விமானங்கள் மற்றும் கருவிகள் தொடர்பான தகவல்களை வெளியிடவும் கோத்தாபய ராஜபக்ஷ தடை விதித்துள்ளார். விமானப்படைக்கு ரஸ்யாவிடம் இருந்து 14 எம்.ஐ 171உலங்குவானூர்திகள் வாங்கப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

போர் முடிவுக்கு வந்த பின்னர், அதிகளவு உலங்கு வானூர்திகளை இலங்கை கொள்வனவு செய்வது குறித்து பலத்த விமர்சனங்கள் உருவாகியிருந்தன.

இந்த நிலையில் ரஸ்யாவிடம் 14 உலங்குவானூர்திகளை கொள்வனவு செய்வதற்கு இன்னமும் உடன்பாடு செய்து கொள்ளப்படவில்லை என்று விமானப் படைத் தளபதி கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# குடிநீரை போத்தலில் அடைக்கின்ற நிறுவனங்களுக்கு புதிய அனுமதிப்பத்திரம்

(கொழும்பு)

குடிநீரை போத்தலில் அடைக்கும் கம்பனிகளின் தரத்தை உறுதி செய்யும் வகையில் புதிய அனுமதிப்பத்திர முறையை அறிமுகம் செய்வதற்காக, நியமிக்கப்பட்ட விசேட குழு தனது சிபாரிசுகளை விரைவில் செய்யவுள்ளதாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

புதிய அனுமதிப்பத்திர முறை பற்றிய வர்த்தமானி அறிக்கை வெளியிடப்பட்ட பின்பு போத்தலில் அடைக்கப்பட்ட நீர் உற்பத்தியாளர்களுக்கு அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான காலக்கெடு ஒன்று கொடுக்கப்படும். அனுமதிப்பத்திரம் பெறாத கம்பனிகள் தமது உற்பத்திகளை விற்க முடியாது என மேற்படி சபையின் தலைவர் கருணாசேன ஹெட்டியாரச்சி கூறினார்.

புதிய விதிகளின்படி நீரை போத்தலில் அடைக்கும் கம்பனிகள், நீரைப் பெறுகின்ற கிணறுகளும் குழாய்க் கிணறுகளும் சோதனைக்கு உட்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, ஐஸ்கிறீம், மென்பானங்கள், பியர் தயாரிக்க நீர் பெறப்படும் மூலங்கள் பற்றி நாம் அக்கறைப்பட மாட்டோம். அது எமது அதிகார எல்லைக்குள் இல்லை என அவர் கூறினார்.

# அடுத்தவருடத்திற்கான வரவுசெலவுத்திட்டத்தில் சுகாதாரத்துறைக்கு 100பில்லியன் ரூபா ஒதுக்கீடு



(கொழும்பு)

சுகாதாரத் துறையின் நலன் கருதி அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தில் நூறு பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்வதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இணங்கியுள்ளதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அடுத்தவருடம் சுகாதாரத் துறையில் மறுமலர்ச்சி எனும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதன்படி அடுத்த வருடம் பிராந்தியங்களிலுள்ள அரச வைத்தியசாலைகள் முன்னுரிமை அடிப்படையில் தரமுயர்த்தப்படவுள்ளன. நவீன மருத்துவ உபகரணங்கள் புதிய தொழில்நுட்பங்கள் என்பன இங்கு பொருத்தப்படவுள்ளன.

பிராந்திய வைத்தியசாலைகளில் மருந்து உட்பட எவ்வித தட்டுப்பாடுகளும் இல்லையென்ற தகவல் அடுத்த வருடத்திலிருந்து வருவது முற்றாகத் தடுக்கப்படும். நாட்டின் கிராமப்புறங்களில் பெருமளவான மக்கள் வாழ்கின்றனர். அவர்களால் மொழிநிதி தட்டுப்பாடு, மற்றும் போக்குவரத்திலுள்ள கஷ்டம் காரணமாக கொழும்பிற்கு வரமுடியாதுள்ளது. எனவே அவர்கள் வசிக்கும் பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளை நவீன மயமாக்குவது அவசியமானதாகும்.

இந்த வருடம் சுகாதாரத் துறைக்கு 92 பில்லியனும் கடந்த வருடம் 74பில்லியனும் கடந்த 2009 ஆண்டு 64 பில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்வதனை ஆராயும் வகையில் அமைச்சரவை உப குழுவொன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

இந்த அமைச்சரவையின் உப குழுவில் அமைச்சர்களான பேராசிரியர் திஸ்ஸ விதாரண, கலாநிதி சரத் அமுனுகம,சுசில் பிரேம ஜயந்த ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இந்த உபகுழு வெளிநாடுகளுக்குச் சென்று மருந்து உற்பத்தி நிலையங்களை நேரடியாகப் பார்வையிட்டு, கொள்வனவு செய்வதற்கான அனுமதியை வழங்கும் இதன்படி பங்களாதேஷ் நிறுவனமொன்றிடமிருந்து மருந்துப் பொருட்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளதாகவும் அமைச்சர் மைத்திரிபால மேலும் தெரிவித்தார்.

# நல்லூர் ஆலய சூழலை துப்புரவாக்கும் பணிகள்

(யாழ்ப்பாணம்)


நல்லூர் ஆலய சுற்றாடல் பகுதியை தூய்மையாக்கும் பணியில் நேற்று முன்தினம் நூற்றுக்கும் மேற்பட்ட மாநகர தொழிலாளர்கள் மும்முரமாக ஈடுபட்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை வைரவர் உற்சவத்துடன் ஆலய பெருவிழா நிறைவு பெற்றது.

இதனை அடுத்து ஆலய சுற்றாடலில் அதிகளவில் காணப்பட்ட கழிவுப்பொருட்கள் என்பன அகற்றப்பட்டு தூய்மையாக்கும் பணிகள் இடம்பெற்றன.

இப் பணியில் நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். (வி)

# இலங்கையிலுள்ள வனப்பகுதிகளில் 5ஆயிரத்து 879 யானைகள் உள்ளன



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் படி,இலங்கையில் 5879 யானைகள் உள்ளதாக தேசிய வனவிலங்குகள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.


அண்மையில் இலங்கை வனப்பகுதிகளில் உள்ள யானைகளின் தொகை குறித்த கணக்கெடுப்பினை வனவிலங்குகள் அமைச்சு நடாத்தியிருந்தது. இவ்வாறு நடாத்தப்பட்ட கணக்கெடுப்பிலேயே 5879 யானைகள் உள்ளதாக நேற்றைய தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 5879 யானைகளில் 1107,குட்டியானைகளும்,122 தந்த முள்ள யானைகளும் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# எங்கே தூங்குவர்



மலையேறுபவர்கள் பற்றி நீங்கள் ரொம்பவே அறிந்திருப்பீர்கள். மிகப் பெரிய செங்குத்தான மலைகளில் ஏறுபவர்கள் அதன் உச்சியை தொடுவதற்கு பல நாட்கள் கூட ஆவதுண்டு. இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்கள் ஓய்வெடுக்க அல்லது தூங்குவதற்கு என்ன செய்வார்கள் என நீங்கள் சிந்தித்துப் பார்த்ததுண்டா? இந்தப் படங்களைப் பாருங்கள் அப்போது புரியும் செங்குத்தான மலைகளில் நாட்கணக்காக ஏறுபவர்கள் எங்கே எப்படி தூங்குகிறார்கள் என்பதை.



# ஆலங்கட்டி மழை



வானில் இருந்து பனிக் கட்டிகளாகப் பொழிவது ஆலங்கட்டி மழை எனப்படுகிறது. நம் ஊரிலும் சாதாரண மழையோடு மழையாக ஆலங்கட்டிகள் விழுவதைப் பார்த்திருக்கலாம். ஆலங்கட்டிகள் எப்படி உருவாகின்றன? கோடை காலத்தில் நிலத்துக்கு அருகே உள்ள காற்றானது நிலத்தை விட்டு உயரத்தில் இருக்கும் காற்றைவிட அதிக சூடாக்கப்படுகிறது. அவ்வாறு சூடாக்கப்பட்ட காற்று மேல்நோக்கிச் செல்ல முனைகிறது. அப்போது அக்காற்று, வானில் மேலும் கீழுமாகப் பல தடவைகள் செல்கிறது. அவ்வாறு மேலே செல்லும் காற்று அதிக உயரத்தை அடைந்து, அங்கு உறை வெப்பநிலை நிலவுவதால் சிறுபனிக்கட்டிப் படிகங்களாக மாறுகிறது. பின்னர் அந்தப் பனிக்கட்டிப் படிகங்கள் மேலிருந்து கீழாகச் சூடான காற்றினூடே விழுவதால் அவற்றைச் சுற்றி நீர் படிய ஆரம்பிக்கிறது. மேலே எழும் காற்று மறுபடியும் அவற்றை மிகவும் குளிர்ந்த நிலையில் தூக்கிச் செல்வதால், முன்பிருந்த பனிக்கட்டிப் படிகத்தின் மேல் இன்னுமொரு பனி ஏடு உருவாகிறது.

இவ்வாறு சூடானதும், குளிர்ந்தும் உள்ள காற்றுக் கிடையே மேலும், கீழுமாகப் பலமுறை தூக்கிச் செல்லப் படுவதால் அனேக பனி ஏடுகள் ஒன்றன் மேல் ஒன்றாகப் படிந்து கடைசியில் பெரிய ஆலங்கட்டியாக மாறுகின்றன. அவ்வாறு பெரிதாகிக் கொண்டே செல்லும்போது, அவற்றின் எடை அதிகரித்துக்கொண்டே சென்று, வானில் தாங்க முடியாத நிலையில் ஆலங்கட்டியாகப் பூமியின் மேல் விழுகின்றன. அதிகாரப்பூர்வமான கணக்குப்படி மிகப் பெரிய ஆலங்கட்டி, 1928 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 6 ஆம் திகதி நெப்ராஸ்காவில் விழுந்துள்ளது. அதன் சுற்றளவு 17 அங்குலங்கள். எடை ஒன்றரை பவுண்டுகளாகும். இந்தியாவில் 1888ஆம் ஆண்டு மொராதாபாத்தில் பெய்த ஆலங்கட்டி மழையில் 250 பேர் உயிரிழந்தனர்.

# கமராக் கண்

ரொரன்ரோவைச் சேர்ந்த விவரணப்படத் தயாரிப்பாளரான றொப் ஸ்பென்ஸ் என்பவர் தனது மற்றைய கண்ணினால் காட்சிகளைப் பதிகின்றார். இது மூளையுடனோ அவரது பார்வையுடனோ தொடர்புபடுத்தப்படவில்லை. புதிய வீடியோ விளையாட்டுத் தயாரிப்பாளர்களான Deus Ex எனும் நிறுவனத்தினருடன் இணைந்து செயற்பட்டு இப்புதிய கமெராக் கண்ணைப் பொருத்தியுள்ளார். 2027 இல் உலகில் இவ்வாறான இயந்திரக் கண்களுடன் பலர் வீதிகளில் திரியலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கருவியில் ஒரு கமரா, கம்பியற்ற மாற்றி, மின்கலம் என்பன உள்ளடங்குகின்றன. இவை றொப்பின் கட்கழிக்குள் வைக்கப்பட்டுள்ளன. இதற்கு 9மி.மீ. மட்டுமே தேவைப்பட்டது.



சிறுவயதில் ஒரு விளையாட்டின் போது தனது கண்ணை இழந்த றொப 5 வருடங்களுக்கு முன்னர் கண்ணினையும் அகற்றியிருந்தார் இவரது கண்ணில் பொருத்தப்பட்டுள்ள கமராவிலிருந்து காட்சிகள் ஒரு கையடக்கமான திரைக்கு மாற்றப்படுகின்றன.

3.2 மி.மீ. சதுர அடியும் 328×250 பிக்செல் கொண்டதுமான சிறியதொரு கமரா கலிபோர்னியாவின் OmniVision நிறுவனத்தினரால் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது.


# கற்கோடாரிகள்

அதிக காலத்திற்கு முன்னதாகவே கற்கோடரி உருவாக்கப்பட்டுள்ளதாகப் புதிய ஆய்வு ஒன்று கூறுகின்றது. 2 மில்லி யன் ஆண்டுகளுக்கும் முனனதாக முன்பு நினைத்ததை விட 3,50,000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே கற்கோடாரிகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என அகழ்வாய்வு நிபுணர்கள் கூறுகின்றனர்.



ஹோமோ இரெக்ரஸ் எனும் நிமிர்ந்து நடக்கத் தொடங்கிய முதலாவது மனிதப் பிரிவினர் எவ்வாறு கருவிகளைத் தயாரித்தார்கள் என்பது எப்போதுமே விஞ்ஞானிகளைக் கேள்வி கேட்க வைத்த விடயமாகும்.

கென்யாவில் கண்டுபிடிக்கப்பட்ட கருவிகள் 1.7 மில்லியன் வருடப் பழமையானவையாக இருந்ததுடன் வெவ்வேறு காலப்பகுதிகளில் வேறுபட்ட தொழில்நுட்பங்களுடன் உருவாக்கப்பட்டும் காணப்பட்டன. Oldowan தொழில்நுட்பம் எனும் பழைய கற்கருவிகள் ஒரு துவாரத்திலிருந்து தேய்த்து எடுக்கப்பட்டவையாக இருந்தன. ஆனால் Acheulian எனும் கருவிகள் நீள்வட்டமாகவும் ஈட்டிவகைக் கைக்கோடரிகளையும் உள்ளடக்கியிருந்தது. இவ்விரண்டையும் ஒப்பிட்டுப்பார்த்த போது இரண்டுமே பாரிய தொழில்நுட்ப வேறுபாட்டைக் கொண்டிருந்தமையைக் கண்டறியக்கூடியதாயிருந்தது. Oldowan தொழில்நுடபமானது இன்னொரு புதிய இடத்தை அடையாளப்படுத்தப் போகின்றதா அல்லது Acheulian பிரிவினரின் ஆரம்பகால நாட்களில் வாழ்ந்த முன்னாள் மனிதர்களினால் இது உருவாக்கப்பட்டது என்பதைக் காட்டுகின்றதா என்று நியூயோர்க்கின் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.



# Mobile ற்கு Ringtone களை உருவாக்க

இலவச ரிங்ரோன் மேக்கர் மென்பொருளானது உங்கள் சொந்த இலவச ரிங்ரோன்களை உருவாக்க ஒரு மிகவும் எளிமையான விண்டோஸ் மென்பொருளாக உள்ளது. இதை பயன்படுத்தி எளிதான வழிமுறைகளில் ரிங்ரோன்களை உருவாக்கலாம்.

தரவிறக்க சுட்டி:- http://download.cnet.com/The-Ringtone-Maker/3000-10440_4-10516244.html

படி 1: ஒரு பாடலை தேர்ந்தெடுங்கள்

உங்களின் சொந்த இலவச ரிங்ரோன்களை உருவாக்க உங்களுடைய கணினியில் ஒரு பாடலை தேர்வு செய்யவும்.

படி 2: சிறந்த பகுதியை வெட்டுதல்

உங்களின் ரிங்ரோன் பாடலின் சிறந்த பகுதியை தேர்ந்தெடுக்க வேண்டும். பாடலின் தேர்வு தொடங்குவதற்கு மற்றும் இறுதி புள்ளி அமைக்க sliders இழுத்து செல்லவும். நீங்கள் பிளேயர் பொத்தான்கள் பயன்படுத்தி ரிங்ரோனை முன்னோட்டமாக கேட்கலாம்.

படி 3: ரிங்டோனை சேமித்தல்

உங்களுடைய கணினியில் ரிங்ரோன் சேமிக்கவும் பொத்தானை கிளிக் செய்யவும். பிறகு நீங்கள் உங்கள் ரிங்ரோன் கோப்பை காப்பாற்ற ஒரு இடத்தை தேர்ந்தெடுக்க முடியும்.

உங்கள் ஆழடிடைந ற்கு தேவையான Ringtone, Themes, wallpaper போன்றவற்றை இலவசமாக பெற உங்கள் Mobile ற்கு தேவையான Ringtone, Themes, wallpaper போன்றவற்றை இலவசமாக பெற ஒரு இணையத்தளம் உள்ளது.

இத்தளத்தின் முகவரி:- http://www.zedge.net/

இத்தளத்துக்கு சென்றால் மேற்கண்டவாறு தான் உங்கள் முகப்பு பக்கம் தோன்றும். இங்கே search என்பதற்கு முன்னால் உள்ள box இல் உங்களுக்கு தேவையான keyword ஐ கொடுத்து உங்களுக்கு தேவையான Ringtone, themes, wallpaper, videos என்பவற்றை பெற்றுக்கொள்ளலாம்.

இத்தளத்திலே முக்கியமான விடயம் என்னவென்றால் இங்கு எந்த மொழியிலும் உங்களுக்குத் தேவையான Ringtone, themes, wallpaper, videos போன்றவற்றை பெற்றுக்கொள்ளலாம்

கணினி மூலை

# நடைமுறையிலுள்ள தூக்குத் தண்டனையை நீதிமன்றங்கள் பரிந்துரைக்கவே செய்யும்

## உள்துறை அமைச்சர் சிதம்பரம்



(புதுடில்லி)

ராஜீவ் கொலைக் குற்றவாளிகளுக்கு சட்டப்படி தான் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இது போன்ற வழக்குகளில் தூக்குத் தண்டனை என்பது நடைமுறையிலுள்ள வரையிலும் நீதிமன்றம் அதைப் பரிந்துரைக்கவே செய்யும் என, உள்துறை அமைச்சர் சிதம்பரம் கூறியுள்ளார்.

ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் முருகன், சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகியோரின் கருணை மனுக்கள் தொடர்பாக ஜனாதிபதி பிரதிபா பட்டீல் தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என, தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வழக்கில் சட்டப்படி தான் குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. தூக்குத் தண்டனை என்பது சட்டத்திலுள்ள வரையிலும், இது போன்ற அரிதிலும் அரிதான வழக்குகளில் அவற்றை நீதிமன்றங்கள் பரிந்துரைக்கும். அதேபோல குற்றவாளிகள் தரபபிலிருந்து ஜனாதிபதிக்குக் கருணை மனுக்களும் வரவே செய்யும்.

தூக்குத் தண்டனை அவசியமானதா என்ற கேள்வி மிகப்பெரிய விவாதத்திற்கு உரியது. தூக்குத் தண்டனை தொடர்பாக மக்களிடையே இரு வேறு கருத்துக்கள் இருந்தாலும், இந்த வழக்கில் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்பதே அரசின் முடிவு.

எனினும், இவ்விவகாரம் தொடர்பான நடவடிக்கைகள் நீதிமன்றத்திலுள்ள காரணத்தால் தமிழக சட்டசபைத் தீர்மானம் குறித்தோ அல்லது ஜனாதிபதியின் முடிவு குறித்தோ எதுவும் கூற முடியாது.

இது தொடர்பாக, சம்பந்தப்பட்ட நீதிமன்றத் தரப்பில் இருந்து உள்துறை அமைசசகத்தின் விளக்கம் கேட்கப்பட்டால் மட்டுமே நாங்கள் விவரிக்க முடியும் என்றார்.

## இந்தியச் செய்திகள்

# சேற்றில் சிக்கியது விமானம் 97 பயணிகள் உயிர்தப்பினர்

(மும்பை)

துருக்கி விமானம் ஒன்று மும்பை விமான நிலையத்தில் தரையிறங்கிய போது ஓடுபாதையிலிருந்து விலகி சேற்றில் சிக்கியது. இந்த விமானத்தில் பயணம் செய்த 97 பேர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

துருக்கி ஏர்வேசுக்குச் சொந்தமான விமானம் அந்த நாட்டு தலைநகர் ஸ்தான்புல்லில் இருந்து மும்பை நகருக்கு வந்த விமானம் நேற்றுக் காலை 4.13 மணியளவில் விமான நிலையத்தில் தரையிறங்கியது.

அப்போது இந்த விமானம் ஓடுபாதையிலிருந்து விலகிச் சென்று சேற்றில் சிக்கியது. எனினும் இந்த விபத்தில் பயணிகள் அனைவரும் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினர். விமான ஊழியர்கள் உட்பட 97 பேர் அதில் பயணம் செய்தனர். விமானத்தில் இருந்த பயணிகள் அனைவரும் பாதுகாப்பாகத் தரையிறக்கப்பட்டனர். இந்த விபத்தை அடுத்து விமானங்கள் புறப்படுவது தாமதமானது.

# நீதிபதி சென் இராஜினாமா




(சென்னை)

பணம் கையாடல் குற்றச்சாட்டில் சிக்கிய கொல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதி சவ்மித்ர சென் நேற்றுமுன்தினம் மாலை திடீரென இராஜினாமாச் செய்துள்ளார்.

அவருடைய பதவியைப் பறிக்க மக்களவையில் நாளை மறுதினம் கண்டனத் தீர்மானம் கொண்டுவரப்பட இருந்த நிலையில் தன் விலகல் கடிதத்தை அளித்துள்ளார்.

கொல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதியான இவர், கடந்த 1983இல் சட்டத்தரணியாகப் பணியாற்றிய போது சிவில் வழக்கு ஒன்றில் நீதிமன்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அப்போது அவர் ரூ33 இலட்சம் ரூபா கையாடல் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது. இது பற்றி உச்ச நீதிமன்ற நீதிபதி சுதர்சன் ரெட்டி தலைமையிலான குழு விசாரணை நடத்தி சென் மீதான குற்றச்சாட்டில் உண்மை இருப்பதாக அறிக்கை அளித்துள்ளது.


# நடிகை சாவித்திரியின் உருவச் சிலை திறப்பு



(சென்னை).

மறைந்த பிரபல நடிகை சாவித்திரிக்கு, ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் உருவச்சிலை திறக்கப்பட்டுள்ளது. இதனை பழம்பெரும் நடிகை வாணிஸ்ரீ திறந்து வைத்தார். தமிழ் சினிமாவில் பழம்பெரும நடிகைகளில் முக்கியமானவர் சாவித்ரி. நடிகையர் திலகம் என்ற பட்டத்தை உடைய அவர், தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி உள்ளிட்ட மொழிகளில் 300இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். கடந்த 1981ஆம் ஆண்டு மறைந்த சாவித்ரிக்கு, அந்திர மாநிலம் விஜயவாடாவில், தும்மலபள்ளி படப்பிடிப்பு வளாகத்தில் சிலை அமைக்கப்பட்டுள்ளது. அந்தச் சிலையை பழம்பெரும் நடிகை வாணிஸ்ரீ திறந்து வைத்தார்.

## யுவன் சங்கர்ராஜாவின் இரண்டாவது திருமணம்



(சென்னை)

இளையராஜாவின் இளையமகனும், பிரபல இசையமைப்பாளருமான யுவன ஷங்கர் ராஜா-ஷில்பா ஆகியோரது திருமணம் திருப்பதியில் நேற்றுமுன் தினம் நடைபெற்றது.

தமிழ் சினிமாவின் முன்னணி இசையமைப்பாளரான யுவன் சங்கர் ராஜாவுக்கு சுஜயா என்ற பெண்ணுடன் ஏற்கனவே திருமணம் நடைபெற்றது. கருத்து வேறுபாடு காரணத்தால் இவர்கள் சில ஆண்டுகளுக்கு முன் விவாகரத்துப பெற்றிருந்தனர்.

இந்த நிலையில், யுவன் சங்கர் ராஜாவுக்கும், ஷில்பா என்ற பெண்ணுக்கும் இடையே காதல் மலர்ந்து தற்போது திருமணம் நடைபெற்றுள்ளது. அவுஸ்ரேலியாவில் தொழிலதிபராக இருக்கும் மோகன்-மைதிலி தம்பதியரின் மகளையே திருமணம் செய்துள்ளார்.

இவர்களுடைய திருமணத்துக்கு இரு வீட்டினரும் ஒப்புதல் அளித்ததையடுத்து திருப்பதியில் நேற்றுமுன்தினம் காலை 10.20 மணிக்குத் திருமணம் நடைபெற்றது.

திருமணத்தில் மணமகன், மணமகள் வீட்டினரும், யுவன் ஷங்கரின் நெருங்கிய நண்பர்கள் மற்றும் உறவினர்களும கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

# ஜெயலலிதாவுக்கு வெடிகுண்டு மிரட்டல் தொ.பேசியில் பேசிய நபருக்கு வலை வீச்சு

(சென்னை)

முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்து அம்புலன்ஸ் அலுவலகத்துக்குப் பேசிய நபரைப் பொலிஸார் தேடி வருகிறார்கள்.

சென்னை திருவல்லிக்கேணி கஸ்தூரிபாய அரச மருத்துவமனையில் 108 அம்புலன்ஸ் அமைப்பின் தலைமை அலுவலகம் செயற்படுகிறது. இந்த அலுவலகத்துக்கு அடிக்கடி யாராவது தொலைபேசியில் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கிறார்கள்.

நேற்றுமுன்தினம் மாலை 3.12 மணியளவில் இந்த அலுவலகத்துக்குச் சிறுவன் குரலில் மர்ம நபர் ஒருவர் பேசினார். ஜெயலலிதா அம்மாவுக்கும், அவரது அலுவலகத்துக்கும் வெடிகுண்டு வைக்கப்பபட்டுள்ளது என்று பேசிவிட்டு அந்த மர்ம நபர் தொலைபேசியை வைத்துவிட்டார்.

இது தொடர்பாக திருவல்லிக்கேணி பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக வெடிகுண்டு நிபுணர்கள் உஷார்ப்படுத்தப்பட்டனர். முதலமைச்சர் ஜெயலலிதாவின் வீடு மற்றும் அலுவலகத்தில் சோதனை நடத்தப்பட்டது. சோதனையின் பின்பு வெறும் மிரட்டல் தகவல் என்று தெரிய வந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக திருவல்லிக்கேணிப் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து தொலைபேசியில் மிரட்டிய நபரைக் கைது செய்ய நடவடிக்கை மேற்கொண்டனர். 'தொலைபேசியில் பேசிய நபர் கடலூரில் இருந்து பேசி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.





இந்தியாவின் மேற்குவங்க மாநிலத்தின் விவசாயத்திற்குப் போதியளவு நீரினை வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தியோர் மீது அதிரடிப்படையினர் தடியடி நடத்திய போது...

## சி.பி.ஐ.விசாரணைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவேன்

**- ஜஸ்வந்த் சிங் -**

(புதுடில்லி)

2ஜி ஊழல் வழக்கில் மத்திய புலனாய்வுத் துறையினரின் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பேன் என்று முன்னாள் நிதி அமைச்சர் ஜஸ்வந்த் சிங் தெரிவித்துள்ளார்.

சி.பி.ஐ. அதன் கடமையைச் செய் வதில் மகிழ்ச்சி அடைகிறேன். எனக்கு என்ன நினைவில் உள்ளதோ, அதை அவர்களிடம் தெரிவிப்பேன். அவர்களுக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பேன் என அவர் குறிப்பிட்டார். எனினும் தன்னிடம் விசாரிக்க வேணடும் என்று சி.பி.ஐ. இதுவரை தகவல் எதுவும் தெரிவிக்கவில்லை என்று ஜஸ்வந்த் சிங் தெரிவித்தார்.

# லிபியா பற்றி எரியும் வரையும் போராட்டத்தை தொடருவோம்

## தலைமறைவாகியுள்ள கடாபி முழக்கம்

(திரிபோலி)

'நாங்கள் தொடர்ந்து லிபியாவில் போராட்டம் நடத்துவோம், லிபியா பற்றி எரியும் வரை போராட்டம் தொடரும்' என தலைமறைவாக வாழும் கடாபி தெரிவித்துள்ளார்.

லிபியாவில் 42 ஆண்டுகள் சர்வாதிகார ஆட்சி செய்து வந்த கடாபியின் ஆட்சி முடிவுக்கு வந்தது. கடாபி நேட்டோ படையிடமோ அல்லது புரட்சியாளர்கள் படையிடமோ சிக்காமல் தப்பி ஓடியுள்ளார்.

அவர் எங்கிருக்கிறார் என்பது தெரியவில்லை. இந்த நிலையில் அவரது ஆவேச முழக்கம் சிரிய தொலைக்காட்சியில் நேற்று முன்தினம் ஒளிபரப்பாகியது. அந்த உரையில், "எனது போராட்டத்தைக் கைவிடமாட்டேன். நான் சரண் அடைய மாட்டேன். நாங்கள் பெண்கள் அல்ல. தொடர்ந்து போராடுவோம்" என முழங்கினார்.

லிபியாவில் போர் தொடந்து நீடிக்கும். அந்த நாடு தீப்பற்றி எரியும் என்றும் அவர் ஆத்திரத்துடன் கூறினார். 42 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட தனது ஆட்சி நாளையொட்டி கடாபி இவ்வாறு உரை நிகழ்த்தியுள்ளார்.



நாங்கள் ஒவ்வொரு நகரமாகவும் ஒவ்வொரு பள்ளத்தாக்காகவும் தாக்குதல் நடத்துவோம். ஏனையவர்கள் லிபியாவை ஆட்சி செய்வதற்கு அனுமதிக்க மாட்டோம் என்றும் தெரிவித்தார். அவரது ஆவேச பேச்சு ஒலிநாடா செய்தியாக சிரிய தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

# இரண்டாம் உலகப்போரின் குண்டு மியன்மாரில் வெடித்துச் சிதறியது

## சம்பவ இடத்தில் 7 பேர் பலி

(ரங்கூன்)

மியன்மார் நாட்டில் இரண்டாம் உலகப் போரின் போது புதைக்கப்பட்ட குண்டு நேற்று முன்தினம் வெடித்ததில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

மியன்மாரின் துறைமுக நகரமான சித்வேக்கு அருகிலுள்ள பகுதியில் இந்த விபத்து நிகழ்ந்தது. கடற்கரையில் புதைந்த நிலையிலிருந்த குண்டைச் சிலர் எடுக்க முயனறபோது அது வெடித்துச் சிதறியது.

இதனால் 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இது இரண்டாம் உலகப் போரன் போது விட்டுச் செல்லப்பட்டதாக இருக்கலாம் எனவும் மேலும் பல குண்டுகள் இப் பகுதியில் காணப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



லிபிய விவகாரம் குறித்த வல்லரசு நாடுகளின் கூட்டம் பிரான்ஸ் தலைநகர் பரீஸில் இடம்பெற்றது. இதில் கலந்துகொள்ள வந்த இங்கிலாந்து பிரதமர் டேவிட் ஹமரூனை நிக்கோலஸ் சர்கோஸி வரவேற்பதைக் காணலாம்.

# ஆண்களுக்கு சமமாக பெண்களும் சம்பளம் பெற 100 ஆண்டுகள் செல்லும்

## பிரிட்டன் ஆய்வில் தகவல்

(லண்டன்)

ஆண்களுக்கு இணையாக பெண்கள் வருமானம் ஈட்ட 100 ஆண்டுகள் வரை செல்லும் என ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் தற்போது ஆண்டு ஒன்றிற்கு பெண் நிர்வாகிகளுக்கு 31 ஆயிரத்து 895 ஸ்ரேலிங் பவுண் ஊதியம் வழங்கப்படுகிறது. அதே நேரத்தில் ஆண்களுக்கு வருடத்திற்கு 42 ஆயிரத்து 441 ஸ்ரேலிங் பவுண் ஊதியம் வழங்கப்படுகிறது.

ஒரே வேலையைப் பார்க்கும் இரு பால் ஊழியர்கள் இடையே இந்தச் சம்பள வேறுபாடு காணப்படுகிறது. சார்டர்ட் மானேஜ் மென்ட் இன்ஸ்டிடியூட் மேற்கொண்ட ஆய்வில் இது தெரியவந்துள்ளது.

2001 ஆம் ஆண்டில் ஆண்களைக் காட்டிலும் பெண்களின் சம்பள விகிதம் அதிகரித்த போதும் மொத்த சம்பளம் ஆணகளைக் காட்டிலும் பெண்களுக்கு குறைவாகவேயுள்ளது.

தற்போது ஆண்களைக் காட்டிலும் இளம் பெண் நிர்வாகிகள் அதிக வருமானம் ஈட்டுவதாக ஆயவு அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

இந்த ஆய்வின்படி தற்போது இளம் பெண் நிர்வாகிகள் 21 ஆயிரத்து 969 ஸ்ரேலிங் பவுண் வருமானம் பெறுகிறார்கள். அவர்கள் இள நிலையில் உள்ள ஆண்கள் பெறும் சம்பளத்தைக் காட்டிலும் 602 ஸ்ரேலிங் பவுண் கூடுதலாக பெறுகிறார்கள்.

இருப்பினும் 2010 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2011 ஆம ஆண்டின் பெண்ணின் சம்பள வேறுபாடு பெரியளவில் உள்ளது. எனவே ஆண் பெண் இரு பாலாரும் ஒரே நிலையில் உள்ள பணிக்கு சமமான சம்பளம் பெறுவதற்கு இன்னும் 57 ஆண்டுகள் முதல் 98 ஆண்டுகள் வரை ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# ஈராக்கில் சுரங்கப்பாதையூடாக 14 கைதிகள் தப்பியோட்டம்

(பாக்தாத்)

ஈராக்கில் சதாம் ஹுசைன் கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்ட பின்பு அங்கு தொடர்ந்து தீவிரவாதச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. எனவே, அங்கு அமெரிக்கப் படைகள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றன.


கைது செய்யப்படும் தீவிரவாதிகள் வடக்கு ஈராக்கில் உள்ள மொசூல் நகர மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் அங்கு அடைக்கப்பட்டிருந்த 14 தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் தப்பி ஓடிவிட்டனர்.

சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவர்கள் சுரங்கம் அமைத்து

சமீபத்தில் மத்திய மொசூல் பகுதியில் அல்-பைசா லியாவில் உள்ள சிறையில் இருந்து 35 பேர் தப்ப முயன்றனர். ஆனால் அவர்களின் முயற்சி முறியடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உடல்மெலிந்து இருப்பவர்கள் மரபணு அதிகம் உடையவர்கள்

(லண்டன்)



கூடுதல் மரபணு இருப்பவரின் உடல் மெலிந்து இருக்கும் என ஒரு ஆய்வின்மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சிலர் உடல் மெலிந்த நிலையில் காணப்படுகின்றனர். அதற்கு மரபணு அதிகளவில் இருப்பதே காரணம் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. லண்டனில் உள்ள இம்பீரியல் கல்லூரிப் பேராசிரியர் பிலிப் புரோகல் தலைமையிலான குழுவினர் இது குறித்து ஆய்வு மேற்கொண்டனர். இதற்காக 95 ஆயிரம் பேரிடம் மரபணு (டி.என்.ஏ.) சோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில், உடல் நலத்தைப் பேணிக் காக்கும் குரோமோ சோம்-16 இல் மரபணு அதிக அளவில் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. மேலும், அவற்றில் உள்ள ஜீணோம் என்ற மூலக்கூறில் அதிக துவாரங்கள் இருபபதாலும் இழப்பு ஏற்படுகிறது. அதனால் தான் நோய் ஏற்பட்டு உடல் மெலிகிறது.

பொதுவாக மரபணு அதிகம் உள்ள குழந்தைகள் சாப்பாட்டை விரும்பிச் சாப்பிடமாட்டார்கள். அதனால் உடல் ஆரோக்கியமின்றி மெலிந்து காணப்படுகிறார்கள் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# உலக பொருளாதார வளர்ச்சிக்கு ஜி. 20 நாடுகள் உதவவேண்டும்

## பிரான்ஸ் வலியுறுத்து

(பாரிஸ்)



உலக பொருளாதாரத்தின் நிலைமை சீரடைய தொழில் துறை வளர்ச்சி அடைந்த ஜி-20 அமைப்பின் உறுப்பினர் நாடுகள் உதவிக்கரம் நீட்ட வேண்டுமென ஜி.20 நாடுகளின்தலைமைப் பொறுப்பை வகிக்கும் பிரான்சின் பிரதமர் சர்கோசி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜி-20 நாடுகளின் கூட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறுகிறது. அப்போது உலக பொருளாதார வளர்ச்சிக்கு உறுதியான முடிவு எடுக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

ஜி-20 அமைப்பின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் கால கட்டத்தில் சர்வதேச நிதியத்தில் சீரமைப்பு, பொருட்கள் விற்பனையில் கட்டுப்பாடு போன்ற நடவடிக்கை என முன்னோடி அம்சங்களை பிரான்ஸ் கொண்டு வந்தது.

வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கு வளர்ச்சி மிக முக்கியமானது. மக்கள் வறுமை நிலையில் இருந்து மீள வேண்டும். கடன் பிரச்சினையில் இருந்தும் பற்றாக்குறையில் இருந்தும் மீள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# லிபியா மீதான தடையை கனேடிய அரசு நீக்கியது

(ரொரண்ரோ)

லிபியாவில் ஜனநாயக ஆட்சி தோன்றியுள்ளதால் அநத நாடு மீது இருந்த தடைகளை கனடா விலக்கிக் கொண்டுள்ளது என பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் லிபிய ஆட்சியாளர்களுடன் கனடா நிறுவனங்கள் தொடர்பு கொள்ளக் கூடாது என கனடா அரசு தடை விதித்திருந்தது. லிபியாவில் தறபோது கடாபி ஆட்சியாளாகள் வீழ்த்தப்பட்டு விட்டார்கள்.

லிபியாவில் கடந்த 42 ஆண்டுகளாக சர்வாதிகார ஆட்சி நடத்தி வந்த கடாபியின் ஆட்சி முடிந்து. தற்போது புரட்சிப்படையினரின் தேசிய மாற்றக்கவுன்சில் இடைக்கால நிர்வாகம் நடைபெறுகிறது.

அந்த நாட்டு மக்கள் பாதுகாப்பு மாற்றத்தை பெற வேணடியவர்களாக உள்ளனர். எனவே அவர்களுக்கு உதவும் வகையில் முதல் நடவடிக்கையாக லிபியா மீதான பொருளாதாரத் தடையை நீக்கி கொள்கிறோம் என பிரதமர் ஹார்ப்பர் தெரிவித்தார்.

பாரிஸ் நகரில் உலக தலைவர்கள் நேற்றுமுன்தினம் கூடி லிபியா குறித்து விவாதித்த போது ஸ்டீபன் ஹார்ப்பர் இதனைத் தெரிவித்தார்.

கனடா எடுத்த முடிவைப் போன்று ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள நாடுகளும் லிபியா மீதான தடையை நீக்க முடிவு செய்தன. இந்தக் கூட்டத்தின்போது லிபியாவின் இடைக் காலப் பிரதமர் மகமூதை கனடாப் பிரதமர் ஹார்ப்பர் சந்தித்துப் பேசினார்.

# போருக்குப் பின் நீளும் வாழ்க்கையின் உறைந்து போன கண்ணீர்த்துளிகள்



எவ்வளவு வருத்தம் தருவதாக விருந்தாலும் குடிமக்கள் கொல்லப் படுவார்கள் என்பதுதான் போரின் முதல் உண்மை. போரின் முதல் இழப்பு குடிமகனே ஆவார். போரின் காரணமாக உண்மையாகப் பாதிக்கப்படுவது குடிமக்களே. குறிப்பாக உள்நாட்டு யுத்தங்களில் அவை தேசிய உயிர் பிழைப்பாக உள்ளன. ஒரு யுத்தவலயத்தில், அவர்கள் சகல இடங்களிலும் காணப்படுவார்கள். கொட்டும் மழையிலோ அல்லது சுட்டெரிக்கும் வெய்யிலிலோ உயிர்பிழைக்க கால்களாலோ, அல்லது மிதிவண்டிகளிலோ, அல்லது கைவண்டிகளிலோ, அல்லது இன்னொருவர் முதுகில் ஏறிக்கொண்டோ ஓடிக்கொண்டிருப்பார்கள். துப்பாக்கிச்சூடுகளினாலும், மற்றும் ஏவுகணைகளினாலும் பலியாவதிலிருந்தும் தங்களைக் காப்பாற்றிக கொள்ளும் ஒரே குறிக்கோளை இலட்சியமாகக்கொண்டு போக்கிடம் தெரியாமல் வட்டம் சுற்றிக்கொண்டிருக்கும் அவர்களின் ஒரே கேள்வியாக இருப்பது, இந்தப் பைத்தியக்காரத்தனம் எப்போது முடிவடையும் என்பதே?

புலிகள் உலகெங்கிலுமுள்ள தங்கள் ஆதரவாளர்களிடம் நிதி திரட்டிய போது இதுதான் இறுதிப்போர் எனக் கூறிய, இலங்கையில் நடந்த கடைசிப்போரின்போது சிக்குண்ட பொது மக்கள் இருபக்கத்தாலும் மோதும் துப்பாக்கிச்சூடுகளிலிருந்து தங்களை வெளியேற்றுவதில் தலையிடும்படி கெஞ்சினார்கள். முன்பு பலதடவைகள் புலிகளின் தலைவர் உயிர் தப்புவதற்காக அவர்கள் மனிதக்கேடயங்களாகப் பிடிக்கப்பட்டிருந்தபோது வெற்றிபெற்றிருந்த இவர்களின் கெஞ்சல்கள், இரங்கல்கள் யாவும் இந்தச் சமயத்தில் பயனற்றுப்போயின.

விடுதலைப்புலிகளின் மாசுமறுவற்ற சாதனையாகத் திகழ்வது, பேரங்களையும், ஒப்பந்தங்களையும் தொடர்ந்து பின்பற்றத் தவறிவருவது மிகவும் உக்கிரமாகப் போராடுவதற்கு வேண்டியேதான். அதைக் கருத்தில் கொண்டு யுத்த நிறுத்தங்களையும் மற்றுமொரு தந்திரோபாயமாகக் கொள்வதுடன் மீண்டும் குழுக்களாக ஒன்றிணைவதற்கும் மற்றும் மறுபடியும் வலிமையும் பொலிவும் பெறுவதற்கு வேண்டியுமே.

அசாத்தியமான வெற்றி ஒன்றை உணர்ந்திருந்த கொழும்பு, 1987ல் புதுடில்லியால் ஏமாற்றப்பட்டதைப் போல இந்தச் சந்தர்ப்பத்திலும் ஏமாற்றப்படும் ஆபத்தை ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் இருக்கவில்லை. இந்த முறை ஜாமீன் கிடைக்கப் போவதில்லை. எதிர்த்தாக்குதல்களை மேற்கொண்டிருந்த புலிகள் முன்பு தங்கள் ஆயுள் நீட்டிப்புக்கு உறுதி வழங்கியிருந்த ஒரு திட்டத்தை அப்போது கையிலெடுக்கத் துணிந்தனர் அதாவது குறிப்பிட்ட சில அழிவுகளுக்கு எதிராக தங்களைக் காப்பீடு செய்யும் உபாயமாக பொதுமக்களை மந்தைகளைப் போல அடைத்து வைக்கும் திட்டமாகும்.

செப்டம்பர் 2001ல் அமெரிக்காமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து புலிகள் சர்வதேச நெறிகளையும் மற்றும் சட்டங்களையும் அலட்சியப்படுத்தி நடப்பதாக கருதப்பட்ட உலக அவதானிப்பு புலிகளை அழித்தொழிப்பதற்குச் சாதகமான ஒரு சூழலை வழங்கியது. அளவுக்கதிகமான உயிர்ப்பலி வாங்கிய அதிநவீனமான பயங்கரவாத இயக்கம் என வகைப்படுத்தப்பட்டிருந்த பிரிவினைக்குழுவினர், கால்நூற்றாண்டுக்கும் மேலாக இரத்த ஆற்றை பெருக்கெடுத்து ஓடவைத்த ஒரு போராட்டத்திலிருந்து தோல்வியுற்று கீழடக்கப்பட்டனர்.

இந்தப் போரை மறக்கப்பட்ட போர், சாட்சியங்களற்ற போர், மோசமானபோர், சமநிலையற்ற போர் என்றெல்லாம் கூறிவரும் சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் அனுதாபங்களையும் புலிகளும் கொழும்பும் ஒரு ஊசற்கட்டை விளையாட்டைப்போல மேலும் கீழுமாகப் பகிர்ந்து கொண்டார்கள். ஆனால் இராணுவ வெற்றியே போரின் இறுதி முடிவாக மொத்தத்தில் பெறப்பட்டது.

பயங்கரவாதம் பற்றிய பூகோள யுத்தங்களை எழுதிய எழுத்தாளர்களால் கூட அடைய முடியாத வெற்றி என வர்ணிக்கப்பட்ட போரை முடிவுகட்டிய பூரிப்பில் திளைத்திருந்த கொழும்பு, பிரளயம் போல பெருகி வரப்போகும் பாராட்டுச் செய்திகளுக்காகக் காத்திருக்கலாயிற்று. ஆனால் செய்திகள் பெருகிவந்தபோது கொழும்புக்கு கழுத்துவலி போய் திருகுவலி வந்தது போன்ற நிலைமைதான் ஏற்பட்டது.

அநேகமான செய்திகள், கண்டனச் செய்திகளாகவே இருந்ததுடன், பவனிவரும் வெற்றியாளரை யுத்தகளத்தில் நடக்கக் கூடாத வகையில் நடந்து கொண்ட நடத்தைக்காக கடிந்து கொணடதுடன், யுத்தக் குற்றங்கள் மற்றும் மனிதநேயத்துக்கு எதிரான குற்றங்களைப் புரிந்ததாகவும் குற்றச்சாட்டுகள் உள்ளடக்கப் பட்டிருந்தன. மிரண்டு போன கொழும்பின் உடனடிப் பதில் (இது ஒரு மனிதாபிமான மீட்பு நடவடிக்கை இதில் பொதுமக்களின் இழப்பு பூச்சியம்) நிலைமையை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்கியது.

எல்லாக் குற்றச்சாட்டுகளையும் முற்றாக நிராகரித்ததுடன் கொழும்புக்கும் விமர்சகர்களுக்கும் இடையேயான 'தகவல் யுத்தம்' நீண்டுகொண்டே போனது. இரண்டு வருட காலத்தில் கசப்பான குற்றச்சுமத்தல்களும் மற்றும் பதில் குற்றச்சாட்டுப் போராட்டங்களும் தொடர்ந்தன. மேலும் அதிர்ஷ்டமற்ற சிறிய நாடுகள் மீது தமது சார்புத் தன்மையான நாட்டத்தை தெரிவு செய்யும் மேற்குலகினரது பக்கத்திலிருந்து கபடத்தன்மை கொண்டது மற்றும் சுய நேர்மையற்றது என்கிற குற்றச்சாட்டுகளுக்கும் கொழும்பு இலக்காக நேர்ந்தது.

சாட்சிகளை உருவாக்கும் முயற்சிகளிலும் மற்றும் கொழும்பை போர்க்குற்றங்களில் சிக்க வைக்கவும் பல்வேறு தரமான நடிகர்களாலும் முடுக்கி விடப்பட்ட முயற்சிகள், மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் மீது தொடர்ச்சியான அழுத்தங்களை வழங்குவது அதிகரித்துக் கொண்டே போனது.

முதலாவதாக ஐக்கியநாடுகள் சபை, அதன் செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவின் சர்ச்சைக்குரிய அறிக்கையானது, காணப்படும் சாட்சியங்கள் மூலமாக, இராணுவ நடவடிக்கையின் கடைசிக் கட்டத்தின்போது சர்வதேச மனிதாபிமானம் மற்றும் மனித உரிமை விதிகளை மீறியுள்ளது சம்பந்தமான இலங்கையின் பொறுப்புக்கூறும் கடப்பாட்டுக்கான மேலதிக விசாரணைகளுக்கு அழைப்பு விடுவதற்கு போதுமானளவு நம்பிக்கையுள்ளதாக உள்ளன எனத் தெரிவித்திருக்கிறது.

அந்த அறிக்கையைத் தொடர்ந்து கொழும்பில் ஐ.நா குழுவின் பேச்சாளராகவும் மற்றும் செய்தித்தொடர்பு ஆலோசகராகவும், யுத்தத்தின் இறுதி நாட்கள் உட்பட பல வருடங்கள் கடமை புரிந்த கோடன் வைஸ் எழுதியுள்ள 'த கேஜ் : ஸ்ரீலங்காவின் யுத்தமும் மற்றும் தமிழ் புலிகளின் கடைசி நாட்களும்' எனும் புத்தகம் வெளிவந்துள்ளது. அதைத் தொடர்ந்து பிரித்தானிய தொலைக்காட்சியின் சனல் - 4 இன் ஆவணப்படமான 'கொலைக்களம்' (இதற்காக, கம்போடியாவின் பொல் பொட்டைப் பற்றி 1980களில் வெளியான திரைப்படத்தை தவறாகக் கருதி விடவேண்டாம்) வெளியாகியுள்ளது.

இந்த மூன்றுமே இலங்கை அரசாங்கம் மானிடத்துக்கு எதிரான குற்றங்களைப் புரிந்துள்ளது என குற்றம் சுமத்துவதற்கு ஏதுவாக ஏராளமான ஆதாரங்கள் உள்ளதாக அழைப்பு விடுக்கின்றன. அறிக்கைக்கும் ஆவணப்படத்திற்கும் எதிரான கொழும்பின் கோபமான மறுதாக்கம் காட்டுவது. ராஜபக்ஷவுக்கு ஒரு தொகுதி புதிய ஆலோசகர்களின் சேவை அவசியம் என்பதே.

ஆரம்பத்தில் கைத்தொலைபேசிகளில் பிடிக்கப்பட்ட காணொளிக் காட்சிகளின் நம்பகத்தன்மைகளைப் பற்றியும் மற்றும் அதில் உள்ள ஒரு தொகுதி உருவங்கள் குற்றச்சாட்டுகளுக்கு ஒப்புறுதியளிக்காதபடியால் அவை ஒருதலைப்பட்சமானதும் மொத்தத்தில் சாட்சியங்கள் முற்றிலும் தவறானவையாகவும் புனையப்பட்டவையாகவுமிருப்பதால் அவற்றை நிராகரிப்பதுடன் இலங்கைக்கு அபகீர்த்தி உண்டாக்கும் வகையில் இவைகள் மேற்கத்தைய ஊடகங்களால் அரங்கேற்றப்பட்டவை எனவும் கூறினார்கள்.

இந்த ஆவணப்படம் வயிற்றைப் புரட்டும் விவ்ரணம் ஒன்றை வழங்கும் ஒரு முயற்சியாக நடுங்க வைக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதன் இறுதி விளைவுகள், அதன் தொனியிலும் செல்திசையிலும் எல்.ரீ.ரீ.ஈயினரின் தகவல்ப்பகுதியினர் ஒளிப்படக்கருவியுடன் யுத்தகளங்களுக்குச் சென்று யுத்தம் நடக்கும் காட்சிகளை தங்களின் பிரச்சாரத்துக்காகவும் மேலதிக ஆய்வுக்காகவும் தயாரிக்கும் ஆவணப்படங்களின் அதே போக்கிலேயே உள்ளது.

இந்தத் தயாரிப்புக்காக புலிகள் பெருமைப்பட்டுக் கொள்ளவேண்டும். கவனமாகத் தெரிவு செய்யப்பட்ட காட்சிகளைத் தணிக்கை செய்து பரபரப்பையும் மற்றும் அதிர்ச்சியையும் வெளிப்படுத்துவதற்கான தெளிவான முயற்சியாக தயாரிக்கப்பட்டிருக்கும் இந்த ஆவணப்படம், அதன் விடயத்தைப் பலவீனப்படுத்துவதுடன் மற்றும் ஊடகவியல் நெறிகளுக்கு ஏற்ப அதன் நம்பகத்தன்மையையும் பொறுப்புக்கூறும் கடப்பாட்டுக்குமாக ஒரு விசாரணையை வரவேற்கிறது. அவை சாட்சியங்களாகப் பயன்படுத்தியிருக்கும் ஆதாரங்களின் அளவு மிகவும் கனம் வாய்ந்தவையாக இல்லை அத்துடன் அவை முக்கியமான பல கேள்விகளையும் எழுப்புகின்றன.

மனித உரிமைகள் வழக்கறிஞர் ஒருவர் சொல்வது: 'அதில் ஒரே ஒரு விதிவிலக்காக இருப்பது மருத்துவமனை ஒன்றின்மீது நடத்தப்படும் தாக்குதல் ஒன்றுதான், அதுவும் உண்மையில் அந்த மருத்துவமனை இராணுவ பாவனைக்காகப் பயன்படுத்தப்பட்டது, என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் இருப்பின் தவறாகிவிடும்' என்று.மற்றும் இப்படியான ஒவ்வொரு மருத்துவத் தளங்களும் புலிகளினால் உபயோகப் படுத்தப்பட்டது என்பதை ஆவணப்படத்தின் கதை மறைத்துள்ளது.

அப்போதைய ஐ.நா. பேச்சாளர் என்ற நிலையில் வைஸ் அந்த ஆவணப்படத்தில் பேசும்போது, கொழும்பு ஐ.நா. பணியாளர்களின் பாதுகாப்புககுத் தனக்கு இனிமேலும் உத்தரவாதம் வழங்கமுடியாது அதனால் ஐ.நா. குழுவினரை யுத்தவலயத்தை விட்டு வெளியேறுமாறு பணித்தது, வரப்போகும் இறுதிக்கட்டப் போரின் போது எந்த சர்வதேச சாட்சிகளும் அங்கு இருக்கக்கூடாது என்பதை உறுதி செய்து கொள்வதற்காகவே என தான் நம்புவதாகக் குறிப்பிட்டார்.

வெளிநாட்டுப் பார்வையாளர்களையும் பணியாளர்களையும் வெளியேற்றுவதற்கான மிகவும் நெருக்கடியான ஒரு காரணம் சீ.என்.என் க்கு ஏற்பட்ட விளைவுகள் இங்கும் வந்துவிடுமோ என்கிற அச்சத்தினால் எழுந்த சந்தேகமாகக் கூட இருக்கலாம் (அது தனது மனிதக் கேடயத்துக்குப் பயன்படுத்த வேண்டி பிரபாகரன் அவர்களைத் தெரிவு செய்து விடுவாரோ என்கிற அச்சம்). வெளிநாட்டவர் ஒருவரின் இழப்பு சர்வதேச பொதுக் கருத்து ஒன்றுக்கு இடமளித்துவிடும். அதற்கும் மேலாக கொழும்பின் அனுபவத்தைப் பொறுத்தமட்டில் எல்லா வெளிநாட்டவரும் (இந்திய மற்றும் மேற்கு) புலிகளுக்கு அனுதாபம் வழங்குபவர்களே.

அவசரமாக போரை முடிவுக்கு கொண்டு வரவேண்டியது கொழும்புக்கு கட்டாயமான ஒன்றாகும். அதற்காகவே அதன் வெட்கம் கெட்ட மிருகத்தனமான பாதையில் செல்லும்படியாக யுத்த முறை அமைக்கப்பட்டது. ஆனால் மீதமிருக்கும் மன்றாடும் இராஜதந்திரிகள் தொடர்ந்து ஆரவாரமாய் கூக்குரலிட்டு மற்றொரு முட்டுக்கட்டை போடும் முடிவை ஏற்படுத்தி விடுவார்களோ என்கிற சந்தேகமும் அந்த நிலையில் அதற்கு ஏற்பட்டது.

அந்த ஆவணப்படம் அதன் அறப் போராட்ட வழியில் ஆதாயம் அடைந்திருக்கலாம் மற்றும் வெறுமனே நல்ல ஊடகவியல் விதிமுறைகளைப் பின்பற்றி மற்றொரு பிரச்சார முயற்சி என்று முத்திரை குத்தப்படுவதிலிருந்து தப்பித்திருக்கவும் முடியும். இதன் கருத்து அது முற்றாக மதிப்பில்லாதது என்பதல்ல. மோசமான ஊடகவியலுக்கு நல்ல உதாரணமாக இருந்தாலும்கூட, யுத்த விதிகளைப் பற்றியும் அரசாங்கங்களின் பொறுப்புக்கூறும் கடப்பாடுகள் பற்றியும் அது முக்கியமான கேள்விகளை எழுப்பத்தான் செய்கிறது. ஆனால் அதனை அது பிரச்சாரத் துணிச்சல் அற்ற தடுமாற்றத்தைத் தவிர்த்து, தனது சொந்த வர்த்தக நம்பிக்கையோடு வெற்றிகரமாகச் செய்திருக்கலாம்.

ஆசிய பசுபிக் பாதுகாப்பு கற்கைகள் நிலையத்தின் இணைப் பேராசிரியர் சியாம் டெக்குவானியின் கட்டுரையிலிருந்து....



# காணாமல் போனவர்களை கண்டறிய புதிய திட்டம்

## இலங்கை செஞ்சிலுவை களமிறங்குகிறது

(யாழ்ப்பாணம்)

யுத்தகாரணமாக உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் கடந்த காலங்களில் காணாமல் போன இலங்கையர்கள் குறித்து கண்டு பிடிக்கும் tracing (றேசிங்) எனும் புதிய செயற்திட்டமொன்றை வடபகுதியில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் அமுல்ப்படுத்தி வருவதாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கென இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் அதிகாரிகள் இருவர் அடங்கிய குழுவினர் வடபகுதிக்கு நேற்று விஜயம் செய்தனர். இவர்கள் நேற்று முற்பகல் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையில் இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்ததுடன் இத்திட்டம் குறித்த பயிற்சிப் பட்டறைகள் ஒவ்வொன்றையும் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களுக்கு நடத்தினர். இதில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்கிளையின் 15 பிரிவின் தொணடர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

காணாமல் போனவர்களது உறவினர்கள் அவர்கள் குறித்த விபரங்களைச் செஞ்சிலுவைச் சங்கப் பிரிவிற்குத் தெரியப்படுத்தி உதவுமிடத்து யாழ். கிளையூடாகக் கொழும்புக்கு இத்தரவுகள் அனுப்பிவைக்கப்பட்டு அங்கிருந்து காணாமல் போனவர்கள் குறித்து விசாரணை செய்து அவர்களைக் கண்டுபிடிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

எனவே காணாமற் போனவர்களது தரவுகள் மேற்படி செஞ்சிலுவைச் சங்கப் பிரிவுக் காரியாலயங்களில் மூலமாக ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் அவ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து இவ் அதிகாரிகள் குழுவினர் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியாவிலும் இத்திட்டத்தை நடைமுறைப் படுத்தவுள்ளதாகவும் மேலும் தெரியவருகின்றது.

# பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பட்டதாரிகளில் தெரிவுசெய்யப்பட்ட 25 பட்டதாரிகளுக்கு அரச திணைக்களங்களில் வேலை வாய்ப்பை பெற்றுக்கொடுப்பதற்கான திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் கீதாஞ்சலி தெரிவித்தார்.

இது தொடர்பான சந்திப்பொன்று அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷவுக்கும் பட்டதாரிகளுக்குமிடையே நடைபெற்றது.

இதனை அடுத்தே திணைக்களங்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்பும் முகமாகப் பட்டதாரிகள் நியமனம் செய்யப்படவுள்ளதாகவும் இவர்களுக்கான நியமனக் கடிதங்களை இம்மாத இறுதிக்குள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார். (77)

# பதில் வெளிவிவகார அமைச்சராக டி.யு.குணசேகர நியமனம்




(யாழ்ப்பாணம்)

சிரேஷ்ட அமைச்சரான டி.யூ குணசேகர, பதில் வெளிவிவகார அமைச்சராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தனது வெளிநாட்டு பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்புவரை பதில் வெளிவிவகார அமைச்சராக அமைச்சர் டி.யூ குணசேகர கடமையாற்றுவார்.

# தொழில் திணைக்களத்திற்கு பண்ணையில் புதிய கட்டடம்



(யாழ்ப்பாணம்)

யாழ். பண்ணையில் புதிதாக அமைக்கப்பட்டவுள்ள தொழில் துறைத் திணைக்களத்திற்கான கட்டட அடிக்கல் நாட்டு விழா எதிர வரும் 08 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரையில் நடைபெறவுள்ளது.

தொழில்துறைத் திணைக்களத்திற்காகப் புதிதாக அமைக்கப்படவுள்ள 3 மாடிக்கட்டடத் தொகுதி 89.6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. தொழில துறைத் திணைக்கள தலைமைக் காரியாலய நிதியில் அமைக்கப் படவுள்ளதாகத் தொழில்துறைத் திணைக்களப் பிரதிநிதி ஆணையாளர் கே.கணேஸ்வரன் தெரிவித்தார்.

இம் மூன்றுமாடிக் கட்டடத் தொகுதியில் முதலாவது மாடியில் தொழில் ஆணையாளர் அலுவலகமும், இரண்டாவது மாடியில் மாவட்ட தொழில்துறை திணைக்களமும், மூன்றாவது மாடியில் தொழில்சாலைகள் திணைக்களமும் நிறுவப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (எஸ்)

# "இன்று வருகிறது கிறிஸ்பூதம்" எஸ்.எம்.எஸ். அனுப்பியவர் சிறையில்



"கிறீஸ் பூதம் இன்று வருகிறது" என கையடக்கத்தொலைபேசிகளுக்கு எஸ்.எம்.எஸ். குறுஞ்செய்தி அனுப்பியதான சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நபர் ஒருவரை எதிர்வரும 12 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க திருகோணமலை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது. மேற்படி சந்தேகநபரால் அனுப்பப்பட்ட குறுஞ்செய்தியினைப் பெற்றுக்கொண்ட நபரொருவரால் பொலிஸ் அவசர அழைப்பான 119 இற்கு விடுக்கப்பட்ட தகவலை அடுத்து மேற்படி நபர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை, பாலையூற்றுப் பிரதேசத்தைச் சேர்ந்த ஜீவரத்னம் ஜீவகாந்தன் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

# வலி.வடக்கு பிரதேச சபை வசாவிளானில் உப அலுவலகம்

வலி. வடக்குப் பிரதேச சபையின் மயிலிட்டி உபஅலுவலகம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முதலாம் திகதி தொடக்கம் வசாவிளான் குட்டியபுலத்தில் அமைந்துள்ள பொதுநூலகக் கட்டிடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

வசாவிளான் கட்டுவன் மற்றும மயிலிட்டிப் பிரதேச மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் முகமாக கடந்த காலத்தில் இந்த அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனாலும் கடந்த காலத்தில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலைகள் மற்றும் இடப்பெயர்வுகள் காரணமாக தற்காலிகமாக மல்லாகத்தில் அமைந்துள்ள வலி. வடக்குப் பிரதேச சபையுடன் இணைந்து இவ் உபஅலுவலகம் இயங்கி வந்தது.

வலி. வடக்குப் பிரதேசசபையின் மக்கள் பிரதிநிதிகளின் முதலாவது சபைக் கூட்டத்தில் மயிலிட்டிப் பிரதேச உப அலுவலகத்தை இடம் மாற்றுவதென தீர்மானிக்கப்பட்டது. தற்போது மக்கள் பகுதி பகுதியாக வசாவிளான் மற்றும் கட்டுவன் பகுதிகளில் குடியேற அனுமதிக்கப்பட்மையால் மக்களுடைய நன்மை கருதி இவ் உபஅலுவலகம் இடம்மாற்றப்பட்டுள்ளது.

# பளைப் பகுதியில் வாழ்வாதார உதவிகள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஏற்பாடு

மீள்குடியமர்ந்த மக்களுக்கு சரியான முறையில் வாழ்வாதார உதவிகளை வழங்கி அவர்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகவுள்ளது என யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

55 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் நேற்று காலை 10.30 மணிக்குப் பளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட கோயில் வயல கிராமத்தில் வாழும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்:

யுத்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து தற்போது மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்குச் சரியான முறையில் உதவிகள் வழங்கப்படவில்லை.

இதனை அடுத்து அரசாங்கத்தால் மிக விரைவாகப் பாடசாலை புனரமைப்பு, வீட்டுத்திட்டம் சுயதொழில் வேலைவாய்ப்பு, வைத்தியசாலை புனரமைப்பு என்பன துரித கதியில் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற கொள்ளப்பட்டு வருகின்றது.

அண்மைக்காலமாக பரபரப்பான சூழ்நிலை நிலவிவருகிறது. வதந்திகளை மக்கள் நம்ப வேண்டாம் என்றும் பொதுமக்கள் அரசாங்கத்துடன் இணைந்து ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் மேலும் பல்வேறு அபிவிருததித் திட்டங்களை மேற்கொள் முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் குறித்த கிராமத்தைச் சேர்ந்த 5 குடும்பங்களுக்கு பசு மாடுகளும், 75 பாடசாலை மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள் என்பனவும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி, சிரேஷ்ட பிரிகேடியர் பிரலிங்க கொப்பக்கடுவ மற்றும் பொதுமக்களும் கலந்துகொண்டனர். (எஸ்)

## கைதிகள் விடுதலை...

பேச்சாளர் மார்க் ட்டோர்னர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் அவசரகால சட்டம் நீக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அறிவித்தமையை அமெரிக்கா ஏற்கனவே வரவேற்றுள்ளதாகவும் எனினும் இச் சட்டத்தின் பாதிப்புக்கள் பொதுமக்கள்ள எவ்வாறு சேதப்படுத்துகின்றன என்பது குறித்து தாம் தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


இதேவேளை, யுத்தம் நிறைவடைந்தபோது கைதுசெய்யப்பட்ட 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளிகளில் எண்ணாயிரத்துக்கும் அதிகமானவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூக மயப்படுததப்பட்டதை அமெரிக்கா வரவேற்பதாகவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் தொடர்ந்தும் நெருக்கடிநிலை காணப்படுவதாக இந்த செய்தியாளர் சந்திப்பில் செய்தியாளர் ஒருவர் கேள்வியெழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த பேச்சாளர் அது குறித்து தமக்கு தகவல் கிடைக்கவில்லை என்றும் எனினும் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து இலங்கை அரசாங்கம் உரிய முறையில் விசாரணைகளை நடத்த வேண்டும் என்ற அமெரிக்க அரசாங்கத்தின் நிலைப்பாட்டை மீள நினைவுபடுத்த விரும்புவதாகவும் கூறியுள்ளார்.


## செய்திப்பாணம்

**பொய்யான வழிநடத்தலில் போகின்றது சமுதாயம்**
**மெய்யென்று சொல்லுமுடல் முதல்பொய் - நொய்யெனும்**
**பணப்பரி மாற்றமும் பாசமுடனே அணைத்திடும்**
**குணவியல் முறைகளும் காண்!**



# யாழ். இந்துக் கல்லூரியில் குடிசைக் கைத்தொழில் கண்காட்சி

## அனைவரையும் அழைக்கிறது யாழ். செயலகம்



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியின் மகிந்த சிந்தனைக்கு அமைவாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் வாழ்வு எழுச்சி நிகழ்ச்சித் திட்ட குடிசைக் கைத்தொழில் கண்காட்சி எதிர்வரும் 10, 11 ஆம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரியில் குடிசைக் கைத்தொழில் கண்காட்சி ஒன்றை நடத்த யாழ். மாவட்ட செயலகத்தினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக்கண்காட்சியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சு, கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப அமைச்சு, இளைஞர் விவகாரம் மற்றும் திறன்விருத்தி அமைச்சு, அரச வளங்கள் மற்றும் முயற்சியாண்மை அமைச்சு, ஆகிய 5 அமைச்சுக்கள் இணைந்து நடத்தவுள்ளன. இக்கண்காட்சி யாழ்ப்பாண மாவட்டத்தில் 6000 பேர் பயனடையக்கூடிய வகையில் இடம்பெறவிருக்கின்றது.

இக்கண்காட்சியில் மேற்படி 5 அமைச்சுக்களும் அதனோடு இணைந்த திணைக்களங்களினாலும் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட பொருத்தமான புதிய தொழில்நுட்ப முறைகள், நவீன இயந்திரங்கள், உற்பத்தி செயற்பாடுகள் மற்றும் தரமான உற்பத்திகளை வெளிக்காட்டக்கூடிய வகையிலும் மற்றும் மக்கள் குறைந்த முதலீட்டுடன் தொழிலைத் தொடங்கக்கூடிய வகையில் தேவையான ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் நிதியினையும் வழங்கக்கூடிய வகையில் கண்காட்சி செயற்படுத்தப்படவுள்ளதுடன், மேலும் முதலீட்டை மேற்கொள்பவர்களுக்குத் தேவையான நிதியினைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற ஆதரவினை வழங்கக்கூடிய வகையில் வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களும் இக்கண்காட்சியில் பங்குபற்றவுள்ளன.

இக்கண்காட்சி மூலம் ஏற்கனவே குடிசைக் கைத்தொழிலைத் தொடங்கியவர்கள் குடிசைக் கைத்தொழிலை தொடங்க ஆயத்தமாக இருப்பவர்கள் வேலை வாய்ப்பின்றி இருப்பவர்கள் ஆலோசனைகளையும் உத்வேகத்தையும் பெறக்கூடிய வகையில் இக்கண்காட்சி அமைக்கப்படவுள்ளது.

இக்கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்படும் நவீன தொழில்நுட்பங்கள், இயந்திரங்கள், உற்பத்தி செயற்பாடுகள் என்பவை யாவும் மிகக் குறைந்த செலவில் கொள்வனவு செய்யக்கூடியதாகவும் ஒருவருடன் இயக்கக்கூடியதாகவும் இருக்கும் என்பதுடன் இதனைக் கொள்வனவு செய்வதற்கான நிதியினை திவிநெகும வாழ்வு எழுச்சி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளுக்குத் தேவையான நிதியினை வங்கிகள், நிதி நிறுவனங்கள் மூலம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதில் ஆர்வமுள்ளவர்கள் கண்காட்சியைப் பார்வையிட்டுப் பயன்பெறுமாறு அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

# வெளிவாரிப் பட்டம் பெறுபேறு வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளதாக வெளிவாரிப் பரீட்சை பிரிவு இணைப்பாளர் க.சிவராஜா அறிவித்துள்ளார்.

மாணவர்கள் 05 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் தமது பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும், மீள் பரீட்சார்த்திகள் அன்றைய தினமே பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வணிக முன்னகர்வு 2009 (புதிய/பழைய பாடத்திட்டம்) பரீட்சைக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வெளியானமை குறிப்பிடத்தக்கது. (எப்.எஸ்)

# நவாலியிலும் மர்ம மனிதன்

(ஆனைக்கோட்டை)

நவாலி பிரசாத் வீதியிலுள்ள வி.எம்.கே. விற்கு சமீபமாகவுள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் வீட்டின் பின்புறத்தில் மர்மமனிதன் ஒருவன் நீண்டநேரம் நின்றுள்ளான்.

இதனை அவதானித்த வீட்டுக்காரர் சந்தேகத்தின் பேரில் தமது கைத்தொலைபேசி மூலம் அயலவர்களுடன் தொடர்புகொண்டு அவர்களை அழைத்து அந்த நபரை சுற்றிவளைத்தபோது திகைப்படைந்த மர்மமனிதன் தப்பியோட முயற்சித்தவேளை மரத்திலிருந்த தடியைப் பிடுங்கி அடித்தபோது அந்த மர்மமனிதன் தப்பியோடி விட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.



ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதிப் பகுதியிலும் மர்ம மனிதர்களின் நடமாட்டத்தால் பொதுமக்கள் அச்சத்துடனேயே இராப்பொழுதைக் கழித்து வருகின்றனர்.

குறிப்பாக யாழ். குடாநாட்டி[ல்] பல இடங்களில் மாலை 6, 7 மணியுடன் வீதிகள் வெறிச்சோடிக் காணப்படுவதுடன், மக்கள் நடமாட்டம் மிகக்குறைவாக உள்ளமையை அவதானிக்க முடிகிறது. (104)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 60வது வருடாந்த தேசிய மாநாடு நேற்று அலரிமாளிகையில் நடைபெற்றது.

1951 ஆம் ஆண்டு செப்டெம்பர் 2 ஆம் திகதி எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் தலைமையில் ஆரம்பமான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் கட்சியாக கட்டியெழுப்பப்பட்டு 1956 ஆம் ஆண்டு முதல்தடவையாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது.

# கட்சி தாவினார் மொல்லிகொட

ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் தெஹிவளை - கல்கிசை மாநகரசபையில் பிரதி மேயர் பதவிக்குப் போட்டியிடவிருந்த கிருஷாந்த மொல்லிகொட தனது ஆதரவாளர்களுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் நேற்று இணைந்துள்ளார்.

அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த அவர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிக்காக பாடுபடவுள்ளதாக உறுதியளித்துள்ளார்.

# அராலியில் குடிநீர் தட்டுப்பாடு விமோசனம் கிடைப்பது எப்போது

(யாழ்ப்பாணம்)

யாழ். அராலிப் பகுதியிலுள்ள பொதுமக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக ஹற்றன் நஷனல் வங்கியினால் அராலி மாதா கோவிலடிப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட குடிநீர்த் தாங்கி பாவிக்கப்படாது காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் இந்த குடிநீர்த்தாங்கி நிர்மாணிக்கப்பட்டு வலி. மேற்கு சங்கானை பிரதேசசபையிடம் ஒப்படைக்கப்பட்டது. அத்தருணத்தில் மேற்படி பிரதேசசபையானது அரசாங்க நிர்வாகிகளின் கைகளில் இருந்தமையால் அதனை உரிய முறையில் பயன்படுத்துவதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லையெனவும் குறிப்பிடப்படுகிறது.

தற்போது மக்களுடைய பிர[தி]நிதிகளைக் கொண்டதாக இச்சபை காணப்படுவதால் இதனை பயன்படுத்தி அராலிப் பகுதி மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையை தீர்த்துவைக்க முன்வர வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

# கேள்விகளுக்குப் பதில் பிரித்தானியத் தூதுவர் தயார்

(கொழும்பு)

மக்கள் கேட்கும் கேள்விகளுக்கு இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் பதிலளிக்கும் காணொளி இருவாரங்களுக்கு ஒருமுறை வெளியிடப்படவுள்ளதாக உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த காணொளி பேஸ்புக்கில் உள்ள BHC Colombo என்ற பக்கத்தில் எதிர்வரும் செப்டெம்பர் 13 ஆம் திகதி தொடக்கம் பகிரப்படவுள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மக்கள் ஊயர்ஸ்தானிகரிடம் கேட்க வேண்டிய கேள்வியை BHC பேஸ்புக் பக்கத்தினூடாக என்றால் “Ask the High Commissioner” என்று அடையாளப்படுத்தியும் @UKinsrilanka மற்றும் @UKinmaldives ரிவிட்டர் பக்கத்தினூடாக என்றால் #asktheHC என்று அடையாளப் படுத்தியும் அல்லது Colombo. General@fco.gov.uk என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாக #asktheHC என அடையாளப் படுத்தி அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இருவாரங்களுக்கு ஒருமுறை உயர்ஸ்தானிகர் 5 கேள்விகளை தேர்ந்தெடுத்து பதிலளிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பிரித்தானியா கொள்கை சம்பந்தப்பட்டதும் ஒலிம்பிக் சம்பந்தப்பட்டதுமான கேள்விகளுக்குமே பதிலளிக்கப்படும் எனவும் தனிநபர் விசா சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கப்படாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான கேள்விகளை Dear Visa Officer பகுதிக்கு அனுப்பி வைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறானா நடவடிக்கைகள் மூலம் மக்களை தெளிவுபடுத்த பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் முன்வந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# சுகாதாரத் துறைக்கு வலுவூட்ட புதிய சட்ட விதிகள் விரைவில்

(கொழும்பு)

சுகாதார துறையில் நிலவும் குறைபாடுகளை நீக்கும் வகையில் புதிதாக ஏழு சட்டங்களை அறிமுகப்படுத்தவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய ஔடதங்கள் கொள்கையை செயற்படுத்துவதற்கு இந்த நடவடிக்கை முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதற்கான சட்ட மூலங்களை தயாரிக்கும் பணிகள் ஏற்கனவே முடிவடைந்துள்ளதுடன் அடுத்த நான்கு மாதங்களுக்குள் அவற்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர தேசிய ஔடத ஒழுங்குபடுத்தும் அதிகார சபை சட்டம், தனியார் வைத்தியசாலைகள் சட்டம், உணவுச் சட்டம், நுளம்பு ஒழிப்பு தொடர்பான சட்டம், மதுபான மற்றும் புகையிலை கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் விசர்நாய்க்கடி நோய் ஒழிப்பு சட்டம் ஆகியவற்றுக்கான சட்ட மூலங்கள் தற்போது தயாரிக்கப்படுகின்றன.

நாடாளுமன்றத்தின் அனுமதிக்காக இந்த சட்ட மூலங்கள் அடுத்த வருடத்திற்குள் சமர்ப்பிக்கப்படும் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# வீதி கடக்க மஞ்சள் கோடு விதியை மீறினால் கைது



(கொழும்பு)

போக்குவரத்து விதிமுறைப்படி வீதியினை கடப்பதற்கு மஞ்சள் கோட்டினை பயன்படுத்தாதவர்களை கைது செய்ய போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 செப்ரெம்பர் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.